அன்பளிப்பு - 40p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 11. 12. 1992

## யுத்தநிறுத்தம் குறித்து ஆய்வு

எதிர்வரும் நத்தார் புதுவருடம் ஆகிய பண்டிகைகளை முன்னிட்டு ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா? என்பது குறித்தும் அத்தகைய யுத்தநிறுத்தத்தை சிறிலங்கா அரசு மதித்து நடக்குமா என்பது குறித்தும் தலைவர் பிரபாகரன் விடுதலைப்புலிகளின் மத்தியகுழுக் கூட்டத்தில் ஆராய்ந்துள்ளார். சாத்தியமாகும் பட்சத்தில் யுத்தநிறுத்தமொன்றை விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது ■

# பலம் பொருந்திய நிலையில் சமாதானத்திற்கு அறைகூவல்



"சுயநிர்ணய உரிமை - தமிழர் தாயகம் ஆகியவற்றின் அடிப்படையிலான தீர்வே அமைதியைத் தரும்." - லோறன்ஸ் திலகர்

"சமாதான முறையில் தீர்வு காண்பதற்கான கதவுகளை நாம் திறந்தே வைத்துள்ளோம். சிறீலங்கா அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரும் சர்வதேசப் பேச்சாளருமான லோறன்ஸ் திலகர் சமாதானத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

'இராணுவத் தீர்வினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென சிறீலங்கா அரசு உணர்ந்துள்ளது. இந்த உணர்வின் அடிப்படையில் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது.

நாம் எப்பொழுதும் பேச்சுவார்த்தையை ஏற்ற சூழலிலும், சூழ்நிலைகளிலும், நிபந்தனையற்ற நிலையில் நடாத்தப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்துள்ளோம். எனவே போர் நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டு பேச்சுவார்த்தை தொடர வேண்டும்.

நாம் பேச்சுவார்த்தைக்கு எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. ஆயினும் பிரச்சினைக்கான தீர்வு தமிழர்களுடைய தாயகத்தின் முழுமையை கவனத்தில் கொண்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமையவேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு வருவதோ விடுவதோ சிறீலங்கா அரசைப் பொறுத்த விடயம். ஆனால் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு வருவது என முடிவெடுத்தால் நாமும் பேச்சுவார்த்தைக்கு தயார்.' என்று மேலும் கூறிய அவர், "ஆயுதங்களை முதலில் ஒப்படைக்க வேண்டும் எனவும், மற்றைய தமிழ் ஆயுதக் குழுக்களை அங்கீகரிக்க வேண்டும் எனவும் சிறீலங்கா அரசு கூறி வந்ததே பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தது' என்றார்.

தமிழீழ இரண்டாவது கட்டப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்க பல இராணுவ வெற்றிகளை ஈட்டி 'இராணுவ ரீதியாக' தமிழீழத்தை அடிமைகொள்ளவோ அடிபணிய வைக்கவோ முடியாது என்பதை நிரூபித்ததுமல்லாமல் சிங்கள இராணுவத்தின் கட்டமைப்பையே சீர்குலைய வைத்ததினால் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ் சிங்கள மக்களின் உயிர், உடல் சேதங்கள் தொடர்வதை நிறுத்தும் மனிதாய நோக்குடன் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்தால் தாமும் தயார் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளமை அரசியல் அவதானிகளிடையே

புள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதியின்பால் காட்டும் அக்கறையையும் தெளிவாக்கியுள்ளது. ஆனால் இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை சமாதான அறைகூவல் குறித்து சிறீலங்கா அரசிடமிருந்து எதுவித பதிலும் வரவில்லை என, லோறன்ஸ் திலகர் அறிவித்துள்ளார் ■

# சமாதானத்தின் பாதையை நாம் கைவிடவில்லை

■ தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்



"நாம் வன்முறை மீது மோகம் கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில் ஆன்ம ரீதியான சமாதானத்தையே விரும்புகின்றோம். ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றோம். அதனால் தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும் சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கின்றோம். சமாதானத்தின் பாதையை நாம் மூடி விடவில்லை. அப்படி மூடி விடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகின்றோம். என்றோ ஒரு நாள் எதிரி எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால் நாம், எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் போர் வெறி கொண்டவர்கள் எம்மை அழித்து விடுவதற்கும், எம் மண்ணை விழுங்கிவிடுவதற்கும் கங்கணம் கட்டியே நிற்கின்றார்கள். இந்த நிலையில் நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

(மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரும் தமிழீழத் தேசியத் தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய வானொலி உரையிலிருந்து) ■

## மன்னார் மாவட்டத்தில் 30 மைல் இராணுவவேலி அரசின் திட்டம் முறியடிப்பு

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# சமாதான முயற்சிகள்

"நிரந்தரமான - நிம்மதியான -கௌரவமான சமாதானம். இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் தமிழீழ மக்களினதும் விருப்பம். இதையடைவதற்காகவே போராட்டம் நடைபெறுகிறது" எனும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் நாலாவது மாவீரர் தின வானொலிச் செய்தி தமிழ் மக்களின் விருப்பையும் போரின் காரணத்தையும் தெளிவுபடுத்தியுள்ளது.

அடக்குமுறை, கௌரவத்தை அழிக்கும் ஒடுக்குமுறை, நிம்மதியைக் குலைக்கும் ஆக்கிரமிப்பு நிரந்தர அமைதிக்கு விடைகொடுக்கும். எனவே ஆக்கிரமிப்பு -ஒடுக்கு முறை -அடக்குமுறையற்ற ஒரு சூழ்நிலையே உண்மையான சமாதானத்தைத் தரும். இதற்காகப் போராடுவது போர் வெறியல்ல, சமாதானத்தின் தேடலே.

1833 ல் பிரிட்டிசார் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் நிர்வாக வசதி என்ற பெயரில் தமிழீழப் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களையும் ஒன்றாக இணைத்து ஐக்கிய இலங்கையை உருவாக்கியபோது அமைதியின்மைக்கான வித்து விதைக்கப்பட்டது. ஆயினும் 1930 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் சனத்தொகை ரீதியாக பெரும்பான்மையினரிடம் தமிழ் மக்களின் நிர்வாகம் செல்லத் தொடங்கிய பின்னரே அமைதியின்மை இனங்காணப்படுகின்றது. 1930 முதல் 1946 வரை பிரிட்டிசாரிடம் மகஜர்கள், பேச்சுவார்த்தைகள் ஜனநாயக எதிர்ப்புக்கள் எனப் பல வழிகளில் அமைதி பெறத் தமிழீழ மக்கள் முயன்றபோதும் அது கைகூடவில்லை. 1948ல் சனத்தொகை ரீதியால் அதிக ஆசனங்களைச் சிங்களவர் பெற்றிருந்த இலங்கைப் பாராளுமன்றத்திடம் சோல்பரிப் பிரபு ஆட்சியை ஒப்படைத்துச் சுதந்திரம் கொடுத்தபொழுது இலங்கையில் பெரும்பான்மை இனம், சிறுபான்மை என்ற சொற்றொடர்கள் பிரசவம் அடைந்தன. ஆயினும் சோல்பரி அரசியல் அமைப்பு 29 ஆவது விதி இரண்டாவது உபவிதியின்படி சிறுபான்மை இனத்திற்கு அரசியல் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இதன்மூலம் இலங்கை மக்களின் இறைமை பிரிட்டிஷாரிடமும் இலங்கைப் பாராளுமன்றத்திடமும் தொடர்ந்து இருந்து வந்தது. பிரிட்டிஷ் மகாராணியிடம் சிறுபான்மை இனம் முறையிடவும் அனுமதிக்கப்பட்டது. இதனாலேயே 1948 முதல் 1955 வரை இலங்கையை ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறவிடாமல் ரஸ்சியா தடுத்து இருமுறை வீட்டோ அதிகாரத்தையும் பிரயோகித்தது. இலங்கை தொடர்ந்தும் பிரிட்டிசின் கீழேயே உள்ளது என வாதிட்டு இலங்கையை தனிநாடாக ஏற்க மறுத்தது. ஆயினும் சிங்கள அரசின் இராஜ தந்திர நடவடிக்கைகளால் 1955 ல் ஐக்கிய நாடுகள் சபையில் தனிநாடாக இலங்கை அமர்ந்து கொண்டது.

1956 முதல் 1960 வரை தமிழரசுக் கட்சி ஜனநாயகப் போராட்டங்கள் மூலம் அமைதி காண முயன்றது. 1960ல் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தப்பட்டும் பயன் இல்லை. இதற்கிடையே பண்டா -செல்வா, டட்லி -செல்வா ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் என பல ஜனநாயக முயல்வுகள் அமைதியைக் கொண்டுவரவில்லை. 1972 ல் சிங்கள பௌத்த பேரினவாதிகள் குடியரசு அரசியலமைப்பு மூலம் தமிழ் மக்களின் இறைமையை பிரிட்டிசாரிடமிருந்து கபடத்தனமாக அபகரித்தனர். இதனால் பிரிட்டிசாரால் உருவாக்கப்பட்ட சிறுபான்மையினப் பிரச்சினை என்ற வடிவம் அழிந்து தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் மண்மீட்புப் போராக ஆரம்பித்தது. இவ் ஆயுதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் வளர்ந்தது. இன்று தமிழ்ப் பகுதிகளில் ஒரு அரசு நோக்கிய அரசு (Defacto Government) தோன்றுமளவுக்கு விரிவடைந்துள்ளது.

முதலாவது ஈழப் போர், அமைதிப்படையென வந்த இந்திய இராணுவ ஆக்கிரமிப்பாளருடன் போர், இரண்டாவது ஈழப்போர் என்ற மூன்று கட்டங்கள் தமிழீழ தேசிய விடுதலைப் போரில் காணப்படுகின்றன. போராட்ட காலத்தில் திம்பு பேச்சுவார்த்தை, 1989ல் சிங்கள அரசுடன் பேச்சுக்கள், 1991ல் ஒரு தலைப்பட்சமாக புலிகள் அறிவித்த போர் நிறுத்தம், 1992ல் தொண்டமான் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் எடுத்த சமாதான முயற்சி என சமாதானத் தீர்வுக்கான பல முயற்சிகளும் எடுக்கப்பட்டன. பிக்குமார் விஜயம், கத்தோலிக்க -கிறிஸ்தவ குருக்களின் விஜயம் போன்ற பல நல்லெண்ண முயற்சிகள் நடைபெற்றன.

ஆனால் சிறீலங்கா அரசு இதையெல்லாம் அலட்சியம் செய்து இராணுவ ரீதியாக தமிழீழத்தை அடக்கி ஒடுக்க முயன்றது. ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான போராட்ட நடவடிக்கைகள் சிறீலங்கா அரசின் ஆயுதப்படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடித்ததும் அல்லாமல் சிறீலங்காப் படையமைப்பையே சீர்குலைய வைத்துள்ளதை உலகு அறியும். இராணுவ ரீதியாக தீர்வு காணமுடியாததென்ற உண்மை சிறீலங்கா அரசிற்கு உணர்த்தப்பட்டுள்ளது. இதனால் பேச்சுவார்த்தை நோக்கி சிறீலங்கா அரசு தள்ளப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இருந்தபோதிலும் பலம் பொருந்திய நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதிக்கான அறைகூவலை விடுத்துள்ளனர். தமிழ்த் தேசிய இனமும் சிங்களத் தேசிய இனமும் சமாதான வாழ்வு பெறுவதாயின் இரு தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையும் தாயக நிலையும் ஏற்கப்பட்ட நிலையில் நடைபெறும் பேச்சுவார்த்தையே அதற்கான வழியை உருவாக்கும். இதற்கு இவ்வழைப்பை சிறீலங்கா அரசு பயன்படுத்த இது நல்ல சந்தர்ப்பம். ■

# சிங்களப்படையின் தந்திரத் தாக்குதலை முறியடித்து வருகின்றோம்

■ விசேட தளபதி கருணா

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத சிங்கள இனவெறி இராணுவம் தனது தாக்குதல் திட்டத்தை மாற்றியமைத்துள்ளது.

பாரிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எமது போராளிகளின் தாக்குதல்களினால் நிலைகுலைந்து சிதறி ஓடிய சிங்கள இராணுவம் தற்பொழுது குறிப்பிட்ட தொகையினரை பயன்படுத்தி பதுங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் எமது நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி சிங்கள இராணுவத்தின் இந்தகைய தந்திரத் தாக்குதலையும் நாம் முறியடித்து வருகின்றோம்.

"சிவபுரத்தி மேடு மாவீரர் துயிலகத்தில் நடைபெற்ற லெப். கேணல் திலீபன் நினைவுதினக் கூட்டத்தில் மட்டக்களப்பு-அம்பாறை பிராந்திய விசேட தளபதி கருணா உரையாற்றுகையில் மேற்கொண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் தியாகி திலீபனை ஐந்தாவது ஆண்டு நினைவு கூருகின்ற வேளையில் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எமது தாய்மண்ணில் ஆயிரக்கணக்கில் சிங்கள ஆக்கிரமிப்பு வாதிகள் அழிக்கப்பட்டு வருகின்றார்கள். எமது மக்களின் எண்ணங்களில் ஏற்பட்டு வரும் எழுச்சி விரைவில் திலீபனின் இலட்சியம் நிறைவேறும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது என்றும் தெரிவித்தார்.

சிவபுரத்திமேடுப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் விக அவர்களின் தலைமையில் நடந்த நினைவுக் கூட்டத்தில் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் திரு. போகன் (பாதர்) செல்வன், பவான் ஆகியோர் நினைவுரையாற்றினார்கள். திலீபனின் நினைவாக மட்டக்களப்பு அம்பாறைப் பிராந்திய மாவீரர் பணிமனையால் நடாத்தப்பட்ட 'மாவீரர்' கட்டுரைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அத்தோடு திலீபனின் தியாகத்தை சித்தரிக்கும் கலை நிகழ்ச்சிகளும் தமிழீழ இசைக்குழுவினரின் எழுச்சி இசைவிருந்தும் இடம்பெற்றன ■

# வேதனை மிகுந்த வாழ்க்கையில் 'பொண்டுகள்சேனை'யில் தமிழ்மக்கள்

சுமார் 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்து கிரானுக்கு அண்மித்ததாகவுள்ள பொண்டுகள் சேனை என்னும் வயல்க் கிராமத்தில் குடியேறியுள்ளார்கள்.

இந்த 300 குடும்பத்தினரும் சிங்கள இராணுவ அட்டூழியத்தால் வாகனேரி, முறுத்தானை, குளத்துமடு, அக்கிரானை ஆகிய இடங்களில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வீடிழந்து, சொத்திழந்து, உண்பதற்கு உணவின்றி உடுப்பதற்கு உடையின்றி உயிரைப் பாதுகாத்துக் கொள்ள இங்கு வந்து குடியேறிய மக்கள் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் மிகவும் துன்பத்துக்குள்ளான முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வாழும் மக்களில் 66 பெண்கள் விதவைகளாகும். இப்பெண்களின் கணவன்மார்கள் சிங்கள இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மருத்துவ பராமரிப்பு இன்றி வாழுகின்ற மக்கள் சிலர் மீன்பிடி, தேன்எடுத்தல் போன்ற தொழிலை மேற்கொண்டாலும் போதிய வருவாய் இல்லாமலேயே காலம் தள்ளுகின்றனர்.

மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் மகப்பேறு நேரத்தில் ஒரு பெண் இறந்துள்ளார் என்பது இம்மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்காமையை எடுத்துக் காட்டுகின்றது. இங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி வசதியை அளிப்பதற்கு பாடசாலை இல்லை. இங்கு அமைந்திருந்த பாடசாலை கூட இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுள்ளது.

அடைமழை பெய்து வரும் இக்காலங்களில் இம்மக்கள் உறைவிடமின்றி மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். இறுக்குப்புல்லால் வேயப்பட்ட சிறு குடிசைகளில்தான் தற்போது இம்மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

உலர் உணவு நிவாரணம் கூட 100 குடும்பங்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. தொழில் தேடி வெளியூர் சென்ற ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இங்கு வாழ்கின்ற பெண்கள் அங்கு செல்லும் வெளியாரைக் கண்டால் ஓடி மறைகின்றார்கள். தங்களின் உடலைப் போர்த்திருக்கின்ற உடைகள் கிழிந்து கந்தலானதால்தான் இந்நிலை ஏற்பட்டிருக்கின்றது என பகைமும் அறிய முடிகின்றது. இவ்வாறான இம்மக்களின் பரிதாபகரமான நிலை பார்ப்போர் மனதை மிகவும் துன்புறுத்துவதாக்குகின்றது.

# நோர்வே செஞ்சிலுவைச் சங்கக் குழு விஜயம்

நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஆகியோர் அண்மையில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து, இடம்பெயர்ந்து வந்து தற்காலிக வதிவிடக் குடிசைகளில் தங்கியிருந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுத் தலைவர் திரு ஆர் இவான்ஸ், வைத்திய விவகார அதிகாரி திரு நர்ஸ்ராசனின், கொழும்புத் தலைமை அலுவலகப் பிரதிநிதி திரு தயானந்தா, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைவர், உபதலைவர், செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு வடமராட்சி கிழக்குப் பிரிவு அலுவலகத்திற்கு வந்து தையல் பயிற்சி வகுப்பு, முதலுதவி வகுப்பு, நடமாடும் வைத்தியசேவை ஆகியவற்றை நேரில் பார்வையிட்டனர்.

இதுபோல் நாகர்கோவிலில் நடமாடும் வைத்திய சேவை, முதலுதவி பயிற்சி வகுப்பு ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

இடம்பெயர்ந்து வந்து இப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சந்தித்து தொழில் செய்வதற்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களை சங்கம் மூலம் தருவதாகக் கூறினர்.

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலைக்கு விஜயம் செய்த இக்குழுவினர் வைத்தியசாலைத் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

## மாவீரர் நினைவாக உதைபந்தாட்டம்

மாவீரர் நினைவாக தாளையடி செல் அன்ரனின் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி கிழக்கிலுள்ள இருபது விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.



# மாணவர் கல்வியில் தலைவர் ஆவலாக உள்ளார்

"எமது தலைவர், மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதில் மிகுந்த ஆவலாக இருக்கின்றார். மாணவர்கள் கல்வியிலே அக்கறையோடு ஈடுபடுவதற்கென, கிராமங்களிலே பல கல்வி வளர்ச்சிக் கழகங்கள் உருவாக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எமது மாணவர்கள் தொழில் நுட்ப ரீதியாக வளர வேண்டும், என்பதற்காக விஞ்ஞானக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன."

இவ்வாறு விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டத்தளபதி செல்வராஜா, யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற, மேஜர் முரளி ஞாபகார்த்த பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

'நாம் மாணவர் மத்தியில் எமது போராட்டம் பற்றிய கருத்துக்களை விதைக்க முயல்கின்றோம். ஏனெனில் தமிழீழத்தை ஆளப் போகின்ற மாணவர்களாகிய நீங்கள், விடுதலைப்புலிகள் எவ்வகையான தியாகங்களைப் புரிந்து விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும்", என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சோ. தங்கன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள், முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட தளபதி திரு. வ. செல்வராசா, மகளிர் படையணி துணைத்தளபதி செல்வி ஜெனி, பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் இவ்விழாவில் வழங்கப்பட்டன.

மேஜர் முரளி ஞாபகார்த்த மலரை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமாரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். ■

# தமிழீழ பொதுக்கல்வி தேர்வு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு முன்னோடிப் பரீட்சை ஐந்து மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. மேற்படி க. பொ. த. சாதாரண தர முன்னோடித் தேர்வுப் பரீட்சைக்கு இம்முறை 147 பரீட்சை நிலையங்களில் 172-32 மாணவர்கள் தோற்றினர். யாழ். மாவட்டத்தில் 109 பரீட்சை மண்டபங்களில் 13378 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 16 மண்டபங்களில் 1402 பேரும் முல்லை மாவட்டத்தில் 12 மண்டபங்களில் 1427 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6 மண்டபங்களில் 582 பேரும் மன்னார் மாவட்டத்தில் 4 மண்டபங்களில் 443 மாணவர்களும் தோற்றினர்.

இம் முன்னோடிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே க. பொ. த. உயர்தர வகுப்பிற்கு தை முதல் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# கல்வி வளர்ச்சி வங்கி நிறுவ தீவிர முயற்சி

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களது நலன் கருதி 'கல்வி வளர்ச்சி வங்கி' ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வங்கி மாணவர்களது பொருளாதார நலன்கருதி உருவாக்கப்படவுள்ளது. பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இவ்வங்கியைப் பயன்படுத்தலாம். பட்டப்படிப்புக் காலத்தில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணுவதற்கு இவ்வங்கியில் இருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல சேமிப்புக் கணக்குகளையும் இவ்வங்கிகளில் ஆரம்பிக்க முடியும்.

மேற்படி கல்வி வளர்ச்சி வங்கியை ஆரம்பிப்பதற்கு துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு வெளிவாரி மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய இப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு இணைப்பாளர் பேராசிரியர் பாலசந்தரம்பிள்ளை இவ்விபரங்களை தெரிவித்தார். ■

# கைப்பற்றப்பட்ட எல்லைகளில் இருந்து வெளியேறுவதற்கான பேச்சுவார்த்தைக்கு இணக்கம்

அரபு-இஸ்ரேல் சமாதான முயற்சியின் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வாசிங்டனில் ஆரம்பமானபோது கைப்பற்றப்பட்ட எல்லைகளிலிருந்து வெளியேறுவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளதோடு தொடர்பான அறிக்கை ஒன்றை இஸ்ரேல் சிரியாவிடம் கையளித்தும் உள்ளது.

முன்னைய சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது கைப்பற்றிய எல்லையோரங்களில் இருந்து வெளியேறுவது குறித்து கடுமையாக விவாதித்து வந்த இஸ்ரேல் திடீரென இவ்வாறான ஒரு முடிவை எடுத்தது. சமாதான முயற்சிகள் முன்னேறுவதற்கு இஸ்ரேல் வழிகாட்டியுள்ள அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். 1967 ம் ஆண்டுப் போரில் இஸ்ரேல் சிரியாவிடம் இருந்து கைப்பற்றிய கோலான்குன்றுகளில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டுமென சிரியா வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை சிரியாவின் சம்மதமின்றி ஓர் சமாதானநிலை உருவாக முடியாத நிலை காணப்படுகின்றது. லெபனானிலும் சிரியா துருப்புக்களை வைத்திருப்பதோடு அரசாங்கத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது.

இந்நிலையில் இராணுவ ரீதியாக குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பலத்தையும் கொண்ட இஸ்ரேல் தொடர்ந்தும் மனித இழப்புகளையும் பொருளாதாரச் சிதைவுகளையும் தொடர விரும்பவில்லை எனவும் இதனாலேயே தனது போக்கில் தளர்ச்சிப் போக்கை காட்டத் தொடங்கியுள்ளதாகவும் அவதானிகள் மேலும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இத்தளர்ச்சிப் போக்கு இராணுவ ரீதியாக பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அரசியல் தீர்வுகளுக்கூடாகவே அமைதி நிறுவப்படலாம் என்பதற்கு உதாரணமாகத் திகழ்கின்றது. ■

# இலையான் பெருக்கத்தால் நோய்கள் பரவும் ஆபத்து

மழைக்காலம் தொடங்கி விட்டதை அடுத்து, எங்கும் இலையான் தொல்லை அதிகரித்திக் காணப்படுகின்றது.

பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் கோட்டல்கள் கடைகள் எங்கு பார்த்தாலும் இலையான் மயமாகவே இருக்கின்றது.

குறிப்பாக யாழ். ஆஸ்பத்திரியில் இலையான் தொல்லை மிகவும் மோசமாகவுள்ளது.

இலையான் பெருக்கம் நாளுக்கு நாள்அதிகரித்து வருவதால், தொற்றுநோய்களும் தீவிரமாகப் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

இதனால் தனிநபர் சுகாதாரம் பேணுதல், திறந்தபடி விற்பனையாகும் பொருள்களை வாங்காமல் விடுவது, மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தொற்றுநோய்களின் ஆபத்திலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

இதே வேளை யாழ். மாநாகர சபையினர் உடனடியாக முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தொற்று நோய்கள் பரவுவதை ஓரளவு தடுக்க முடியும் என்று நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர். ■

# இந்திய உதவியுடன் ஆசியாவுக்குள் வர விரும்புகிறோம்

## ■ இஸ்ரேல் தூதுவர்

"இஸ்ரேல் முன்னர் ஆசிய நாடு. ஆயினும் அரசியல் சூழ் நிலைகளால் ஐரோப்பாவுக்குள் தள்ளுண்டு நிற்கிறது. இந்தியாவை எமது பெரிய சகோதர நாடாக கருதுகிறோம். தொன்மையான பாரம்பரிய உறவுகளையும் தொடர்புகளையும் நாம் கொண்டிருக்கிறோம். இந்திய உதவியுடன் ஆசியாவுக்குள் வர விரும்புகின்றோம்".

இவ்வாறு இஸ்ரேலின் 1வது இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஈபிரகிம்டோவுக் கூறியுள்ளார். 45 வருடங்களின் பின் இஸ்ரேல்-இந்திய உறவு மறுபடியும் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கிடை இஸ்ரேலுடன் இந்தியா ஆயுத ஒப்பந்தமொன்றை விரைவில் கைச்சாத்திடலாமென புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரான் ரஸ்யாவிடமிருந்து இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நவீன ஆயுதங்களை வாங்கியுள்ளது. இவற்றுள் நவீன ரக போர் விமானங்களும் அடங்கும். இதற்கிடை நூற்றிற்கு மேற்பட்ட மிக் 29 யுத்த விமானங்களைப் பொருத்தக்கூடிய விமானம் கட்டும் தளமொன்றை ரஸ்யா, ஈரானில் உருவாக்கத் தொடங்கியுள்ளது. அத்துடன் அமெரிக்காவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் நவீன நீர்மூழ்கிகளையும் வழங்கியுள்ளது. இது ஒருபுறமிருக்க சீனாவும் ஈராணுக்கு பெருமளவில் நவீன ஆயுத உபகரணங்களை வழங்கத் தொடங்கியுள்ளது. ஆசியாவின் மிகப்பெரிய முஸ்லீம் நாடான ஈரான் திடீரென ஆயுதக் கொள்வனவில் பல பில்லியன்களைச் செலவழிப்பது மற்றைய ஆசிய நாடுகளிடை தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதன் விளைவே இந்திய இஸ்ரேல் ஆயுதக் கொள்வனவு கைச்சாத்து முயற்சிகள் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ■

## மன்னாரின்.....

இருந்து முறையே 50 இற்கும் 30 இற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

தமிழீழத்தில் மிகப் பெரிய அளவில் காவல் உலா வந்த படையினர் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டு அடிப்படை அணி முற்றாக அழிக்கப்பட்ட நிகழ்ச்சி வஞ்சியன் குளத்தாக்குதல் ஆகும்.

"வங்காலை இறங்கு துறையில் வந்து அடிப்பம் (9-10-90) என்று எதிர்பார்த்திருக்க மாட்டாங்க. அங்கு தாக்கிவிட்டு இரண்டு அல்லது மூன்று நிமிடத்திற்குள் வெளியே வேண்டும். அத்தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டனர்".

பூநகரித் தாக்குதல் பற்றி (25-9-92) நினைக்கக்கூடப் பார்த்திருக்கு மாட்டாங்க. இரண்டரை மைல் இராணுவ வேலியை அழித்து. 62 காவலரண்களைத் தகர்த்தோம். 25 படையினர் கொல்லப்பட்டாங்க. 30 க்கு மேல் ஆயுதங்கள் கைப்பற்றினோம். அதிலதான்... ஆள் காயப்பட்டுவிட்டது என்றுதான் சொன்னாங்க. உடம்பைத்தான் கொண்டுவந்தாங்க.

எந்தத் தாக்குதல் என்டாலும் கடைசி வேவுக்கு கபன் வரும். வந்து பார்த்து யார் யார் எங்கு நிலையெடுக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும், என்று சொல்லும்.

அதன் பிறகுதான் தாக்குதல் நடக்கும். ஆள் பக்கத்திலே நிற்குது என்டாலே ஒரே உற்சாகமாக இருக்கும்.

"அண்ணே, செய்ய முடியாது, என்று ஒன்றும் இல்லை" என்று கபன் அடிக்கடி சொல்லும்.

கபனின் அகரமுதலில் 'முடியாது என்று ஒன்று இல்லை'. ■



# சக்கோட்டைகிராமத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை

பருத்தித்துறை பிரதேச சபை சக்கோட்டைக் கிராமத்தில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இல் ஆயுர்வேத வைத்தியசாலை கிளைத் திறப்பு விழா சக்கோட்டை அர்ச். சவேரியார் சனசமூக நிலையத் தலைவர் திரு. டேவிட் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை உதவிப் பங்குத் தந்தை அருட் திரு சிங்கராயர் அடிகளார் மங்கள விளக்கையும், தமிழீழ கடற்புலி உறுப்பினர் திரு. விஜயன் தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளரும், பிரதேசச் செயலாளருமான திரு. சி. முருகேசபிள்ளை நாடாவை வெட்டி, வைத்தியசாலைக் கிளையை திறந்து வைத்தார். ஆயுர்வேத வைத்திய அதிகாரி திருமதி யோ. இந்திராணி மரியநாயகம் நோயாளருக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்கி வைத்திய சேவைகளை ஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேசச் செயலாளர் திரு. ச. செல்வந்திநாதர், அதிபர் திரு. ச. மயில்வாகனம், ஆயுர்வேத வைத்திய அதிகாரி எஸ். கனகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். ■

### கேட்கத்தடை

அக்கரைப்பற்று பகுதியிலுள்ள கோளாவில், ஆலையடி வேம்பு, பனங்காடு, கோமாரி ஆகிய கிராமங்களில் வசிக்கும் தமிழ் மக்கள் வெரிட்டாஸ் வானொலி தமிழ் செய்திகளை கேட்பதற்கு சிங்களப்படையினர் தடை விதித்துள்ளனர். ■

# மன்னாரின் முத்து

"4.30 மணிக்கு சுபன் எழும். அதுக்கு முன்னமே, சனம் வந்து அவனைப் பார்க்க நிற்கும்.

எழும்பினதிலிருந்து வந்தவங்களை சுபன் சந்தித்துக் கதைக்கும். சண்டைக்குப் போட்டு வந்து களைச்சு இருக்கும்; அப்பவும் யாரும் சந்திக்க வந்தா சந்திச்சு கதைக்கும்.

வெளியிலை வேலை செய்யேக்கை சரியாச் செய்வம்; இல்லாட்டி சனம் சுபனிட்ட சொல்லிடும்.

நாங்கள் ஏதும் சொன்னால் உங்களோட என்ன பேச்சு. நாங்க தளபதிகிட்ட சொல்லிக்கிறோம் என்று, சனம் சொல்லும்.

சுபன் செத்ததை அவங்களாலை தாங்கிக்க முடியலை."

மக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதில் சுபன் காட்டிய கரிசனையையும், அவனுக்கும் மக்களுக்கும் இருந்த நெருக்கத்தையும் பரஞ்சோதி சொல்லிக் கொண்டிருந்தான்.



"குடும்பங்கள் பிரிஞ்ச சிக்கல் எண்டால் சுபன் நேரடியாகவே தலையிடும். எவ்வளவு குடும்பங்களை சேர்த்து வைத்திருக்கும்."

மன்னாரில் கள்ளியடியில் பிறந்த சுபனின் குடும்பம் பெரியது. 'அண்ணே... என்னை வளர்க்க எனது அப்பர் 100 மாடு வளர்த்தாராம்' என்று சுபன் சொல்லிச் சிரிக்கும்.

மழைக்கு இருண்ட வானத்தில் மின்னல் வந்து சிறிது நேரம் தரும் வெளிச்சத்தில் இருட்டே தெரியாதது போல, சுபன் சிரிக்கும்போது அவனது பல்லின் வெண்மையில் அவன் கறுப்பு முகம் மறைந்து போகும். மாட்டில் பால் கறக்கும்போது 'சர், சர்' என சீராக வரும் ஒலிபோலவே சுபன் கதையும் சீராக, மெல்லிய இசை நயத்துடன் ஒலிக்கும்.

"அப்பர் சொந்தமா மாடு வளர்த்தவரோ, இல்லை ஊரிலை இருக்கும் மாடுகளைப் பிடித்து வந்து அடைத்து வளர்த்தவரோ" என, நாம் சுபனைக் கிண்டல் செய்வதுண்டு.

"இந்தியாவிலே பயிற்சி முகாமிலே, சுபனை மாட்டுக்குள்ளதான் காணலாம். கடினமான பயிற்சிப் போராளிகளை பராமரிக்கப் பால் தேவைப்பட்டது. அதை சுபன் செய்தது."

தமிழ்நாட்டில் ஒரு மலைப்பகுதியில் இந்த பயிற்சி முகாம் இருந்தது. அடிக்கடி கீழே வந்து பால் எடுத்துச் செல்லமுடியாது.

மன்னாரின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையை சுபன் காட்டினான்.

விதைக்காத நெல்வயல்களை விதைக்க முயற்சி செய்தான்.

மக்கள் குறை தீர்க்க அடிப்படை வசதிகளை அங்கே அமைக்க முயன்றான்.

'உயிலங்குளத்திற்கும் அடம்பனுக்கும் இடையிலதான் மன்னார் நகரம் அமைய வேண்டும்' என சுபன் அடிக்கடி கூறும். 'தமிழீழத்தில் அப்படித்தான் இருக்கும்' என சொல்லிக் கொள்ளும்.

மன்னார் மாவட்ட போராளிகளின் குடும்பங்களின் துன்பங்கள் துயரங்கள் அவனை மிகவும் வாட்டும்.

மன்னாரில் வீரச்சாவைச் சந்தித்த எல்லாப் போராளிகளின் நிழற்படங்களுடன் கூடிய ஒரு வீடு, முதன் முதலில் தமிழீழத்தில் மன்னாரில் தான் அமைக்கப்பட்டது.

## மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி
## லெப். கேணல் சுபன்

(வினாசித்தம்பி கந்தரூபன்)
கள்ளியடி, இலுப்பைக்கடவை
மன்னார்.

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 21-07-1965 | 25-09-1992 |

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

"மாவீரர் துயிலும் இல்லத்தை மிகவும் சிறப்பாக அமைக்க சுபன் கவனம் எடுத்திச்சு. அடிக்கடி சென்று பார்க்கும். கடைசியாகவும் பல வேலைகளைச் செய்யச் சொல்லிச்சு. ஆனால் பார்க்கத்தான் ஆள் இல்லாமல் போச்சு."

பரஞ்சோதியின் நா தளதளத்தது.

"எதையும் அழகாகச் சிறப்பாகச் செய்யணும் எனச் சொல்லும். செய்தும் காட்டும்."

"தோரணம் கட்டிக்கொண்டு நின்றேன். சுபன் வந்ததைப் பார்த்தேன். ஏதோ பிழை பிடிக்கும். பின் தானே நின்று கட்டிக் காட்டும். நான் ஒழிச்சிட்டேன். ஆள் வந்திச்சு. பார்த்து விட்டு தோரணங்களை அவிட்டுக் கட்டிச்சு. பரஞ்சோதி எங்கே என்று கேட்டுது. போனேன்."

"தோரணம் கட்டினது சரியா" என்று கேட்டது. "சரிதான்" என்றேன்.

"ஒன்றிலே நாலு முடிச்சு கட்டி இருக்கிறீங்க. இன்னுமொன்றிலே மூன்று முடிச்சு போட்டிருக்கிறீங்க. எல்லாம் ஒரு சீரா இருந்தா நல்லதுதானே" என்று சொல்லிச்சு.

"இப்படித்தான் எந்த விடயமென்றாலும், அது சின்ன விடயமென்றாலும் சரியாகச் செய்ய வேண்டும், எனச் சொல்லும்."

"பிழை யாரும் விட்டா கண்டிக்கும். பிழைகளை தெளிவாக விளங்கப்படுத்தும்."

"கண்டிச்சுப்போட்டு நல்லா அரவணைக்கும்."



"கண்டிப்பும் அரவணைப்பும் அதை எப்போதும் குறிப்பிட மறந்திடாதீங்க" என்றான் பரஞ்சோதி.

"பண்டிக் கருக்கல் என்றால் சுபனுக்கு விருப்பம். தொதோல், மசுகெட் இதுவும் விருப்பம்."

"ஆள் நல்லா சமைக்கும். ஓய்வா இருந்தா சமைக்கும்; சமைச்சு எல்லோருக்கும் சாப்பிட கொடுக்கும்."

"ஒரு நாள் ஒரு ஐயாவை கூட்டி வந்தாங்க. அவர் சமையலிலே பெரிய ஆள் அதைச் செய்வார் இதைச் செய்வார் என்டாங்க.



சுபன் விதவிதமாக 'அது செய்வீங்களா இது செய்வீங்களா' எனக் கேட்டுது. அவருக்கு கேட்ட ஒன்றுமே செய்யத் தெரிந்திருக்கலை. சுபன் தான் அவருக்கு செஞ்சுகாட்டும்.

அந்த ஐயாவும் சமையலும்... அது பெரிய பகிடி.

மழை பெஞ்சா இரவிலே நித்திரை இல்லை என்று தெரிஞ்சுக் கோணும். சுபன் வேட்டைக்குப் போகும். நாங்க துவக்கை தூக்கினா மானுக்கோ, முயலுக்கோ தாங்க தப்பிக்கலாம் எனத் தெரியும்.

சுபன், 'நீ போய் எடுத்து வா' என்று சொல்லிவிட்டு சுடும். குறி தப்பாது.

குறி தவறாமல் சுடுவதில் மட்டுமில்லை, ஆயுதங்களில் சுபன் மிக்க கவனம். 'எத்தனையோ போராளிகளின் குருதிசிந்தி பெற்ற ஆயுதம்' என்று அடிக்கடி சொல்லி, ஆயுதங்களை மிக கவனமாகக் கவனிக்கும்.

ஆயுதம் பேணுதல் எப்படி இருக்க வேண்டும் என்று நான் விளக்கத் தேவையில்லை. அது உங்களுக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டு பரஞ்சோதி.

கண்டிப்பு - அரவணைப்பு - அது முக்கியம். அதை மறந்திடாதேங்கோ என்றான்.

மடு ஏதிலிகள் தங்ககத்தை ஒழுங்குபடுத்த சுபன் கடுமையாக உழைத்தான்.

இப்படியான ஒரு சிக்கலை மன்னார் சந்தித்தது இது தான் முதல் தடவை.

இருக்கும் குறைந்த வசதிகளுடன் தன்னால் இயலக் கூடியதை அவன் செய்தான்.

இந்தியாவில் பயிற்சி முடித்து திரும்பிய சுபன், லெப். கேணல் விக்டரோடு நின்று மன்னாரில் செயற்பட்டான். 1986 இன் நடுப்பகுதியில் மன்னாரில் நடந்த ஒரு சண்டையில் காயமடைந்து சிகிச்சைக்காகத் தமிழ்நாடு சென்ற சுபன் அதன் பின்பு தலைவரோடு மூன்று ஆண்டுகள் நின்றான்.

2.4.87 அன்று, காங்கேசன்துறை தங்ககத்தில் சிறீலங்காப் படையுடனான மோதலில் காயமடைந்தான்.

தலைவர் பிரபாகரனைத் தேடி, மணலாற்றுக் காட்டில் இந்தியப் படையினர் 'செக்மேற்' 1, 11, 111 என்ற இராணுவ நடவடிக்கைகளைச் செய்தபோது, அந்தச் சண்டைகளில் நின்றான்.

15.4.89 அன்று, வெலி ஓயாவில் சிங்களப்படையை மறைந்து தாக்கிய நிகழ்ச்சியில் முதன்மைப் பங்கு வகித்தான்.

1989 நடுப்பகுதியில் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான்.

சுபன் பொறுப்பேற்று சிறிது காலத்தில், மேஜர் துட்டியின் தலைமையில், மன்னார் மருத்துவமனையில் இந்தியப் படையின் சிறிய தங்ககம் மீதான தாக்குதல் நடந்தது. அத்தாக்குதலில் 24 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

நாலு பிறன் இலகு இயந்திர துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

1990 இன் ஆரம்பத்தில், கிளிநொச்சிக் காட்டுப் பகுதியில் இருந்த ஈ.என்.டி.எல்.எவ் துரோகக் கும்பலின் முகாம்மீது நடாத்தப்பட்ட பெரிய தாக்குதலில், சுபன் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்தான்.

தமிழீழ - சிறீலங்காப் போர் மீண்டும் வெடித்த பின் தலைமன்னார் பழைய பாலம் படைத்தங்ககம் (10.6.90), கஜவத்தை தங்ககம் (21.6.90) என்பன முற்றுகைத் தாக்கி அழிக்கப்பட்டன.

கஜவத்தையில் இருந்த பவள் காகனம் ஒன்று கைப்பற்றப்பட்டது.

சிலாவத்துறை, ஆனையிறவு படைத் தங்ககங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சுபன் கலந்து கொண்ட முக்கிய தாக்குதல்களாகும்.

சுபனின் காலத்தில் வஞ்சியன் குளத்திலும் (29.04.91) வேப்பங் குளத்திலும் (30.3.92) நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல்கள் புகழ்பெற்ற தாக்குதல்களாகும்.

வஞ்சியன் குளத்தில் 60 இற்கும் மேற்பட்ட படையினரும், வேப்பங்குளத்தில் 24 படையினரும் கொல்லப்பட்டனர். இவற்றில்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

# கண்ணீரின் நெருக்கம்

"அம்மன்ர வாசலுக்குத் தானேய்யா..... அதொண்டும் நடவாது" சகுந்தலை தந்தைக்குப் பதில் சொன்னாள். தந்தைக்கு மட்டுமல்ல அவள் தனக்குத் தானேயும் அதனைத்தான் சொன்னாள். அவளால் இன்று அங்கு போகாமல் இருக்க முடியாது.

நெஞ்சு காய்ந்த தவிப்பு மகள் போவதைத் தடுக்க முடியாதா என்ற ஏக்கம். முருகேசருக்கு வியர்த்தது.

" சனங்கூடுற இடத்தில அவ னொண்டும் செய்யான் அப்பிடிச் செய்தா ஊருலகத்திற்கு பதில் சொல்ல ஏலுமே......?" மருமகன் துணைக்கு வந்தான்.

"ஊர் ... உலகம் ... ம் ..." மனதிற்குள் வெப்பம். ஆழ்ந்த பெருமூச்சொன்றுக்கு ஏற்ற மாதிரி நெஞ்சு ஏறி இறங்கியது.

" உங்கால ...... மட்டக்களப்பு திருகோணமலைப் பக்கத்தில ஆயிரக்கணக்கான சனம் கொல்லப்பட்டு ... சீரழிந்து சிதைந்து போய் ... இதெல்லாம் இந்த உலகத்தின்ர ....." சொல்லதால் என்ன விளையப் போகிறது? முருகேசர் வார்த்தைகளைத் தொடராமல் கதிரில் சாய்ந்து வெறுமையில் எதையோ தேட முயன்றார்.

அவருக்கு எல்லாமே மகள் தான் . அவரது வாழ்வு . இன்ப துன்பம் எல்லாமே அவள் தான் !

அவர்கள் வாசலிற்கு வந்தனர். சின்னவனை சகுந்தலை வைத்திருந்தாள். மூத்தவன் தகப்பனுடன் ஓட்டிக் கொண்டு நடந்தான்.

மகளும் மருமகனும் கண்டாயத்தைக் கடக்கும்போது முருகேசர் நிமிர்ந்து பார்த்தார்.

தேவி உன்ர வாசலுக்கு வாற என்ர குஞ்சுகளுக்கு ஒரு தீங்கும் வரவிடாமல் பாரம்மா! கைகளைக் கூப்பினார் கண்களில் நீர் துளிர்த்தது.

* * *

கண்ணகி அம்மன் வாசல். சற்று அதிகமாகவே மக்கள் கூடி நின்றார்கள். வழமையான வைகாசிப் பொங்கல் என்றால் இடம் கொள்ளாத சனமாக இருக்கும்.

அவை எல்லாம் கனவாகி மறந்துபோன நாட்களாகப் போய் விட்டன.

இப்போதெல்லாம் படையினரின் ரவைகளுக்கும் வானூர்திகளின் குண்டுகளுக்கும் தேவைப்படும் இலக்காக அந்த ஆலயம்தான் இருக்கிறது.

கோவிலையும் கோபுரத்தையும் பார்த்தபடியே நெஞ்சில் கை வைத்து கண்களை மூடினாள் சகுந்தலை. மனதிற்குள் ஆயிரம் வேண்டுதல்கள்.

மூன்று பக்கங்களாலும் கோவிலின் வீதியை மருவி முற்றும் துறந்த முனிவன் ஒருவனைப் போல் அசையாது அமைதியாகத் துயில்கொள்ளும் நந்திக் கடலைப் பார்த்தவள், கண்கள் பனிக்க அப்படியே சங்கரனைப் பார்த்தாள்.

திருமணப்பந்தமென்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதோ வேறு எங்கு நிச்சயிக்கப்படுகிறதோ தெரியாது! ஆனால் அதற்கோர் அதிசயமான புனிதத் தன்மை உண்மையிலேயே இருக்கிறது. இல்லையென்றால் சில வருடங்களுக்கு முன்னால், இந்த வீதியில் திரண்டிருந்த லட்சக்கணக்கானவர்களில் சங்கரனை அவள் எப்படிக் கண்டு கொண்டாள்.

இன்று இரண்டு குழந்தைகள். அவளைப் பொறுத்தவரை எல்லாமே அந்தக் கண்ணகித்தாய் தந்ததென்ற உணர்வு. அதனால் தான் ஒவ்வொரு பொங்கலுக்கும் வருகை தர அவள் [illegible]. வர முடியாமல் போகும் பொழுதுகளில் கவலையுடன் சோர்ந்து போவாள்.

கோவிலடியில் உண்மைப் பொருளின் தேடல் மக்களின் பக்திப் பிரவாகம். ஆனால் சிறு கடலின் மறுமுனையில் இராணுவத்தினரின் கழுகுக் கண்கள் இவர்களை இலக்கு வைக்கத் தொடங்கி இருந்தன.

மனதுக்குள் அவள் கண்ணகித் தாயுடன் பேசிக் கொண்டிருந்தாள் அவளின் கணவன் பிள்ளைகள் அவர்களது நல்வாழ்வு
கண்களில் நீர் வழிந்தது. வாய் முணுமுணுத்தது. தாயே என்ர அவருக்கும் பிள்ளைகளுக்கும் எந்தக் கெடுதியும் வராமல் பார்த்துக் கொள் அம்மா.
அந்த நேரம்தான் வெடிப்பின் அதிர்வொன்று காற்றை அசைத்துச் சென்றது. மனிதர்களும் [illegible] அதிர்ந்தன.

காற்றில் அவலக்குரல்கள் நிறைந்தன மக்கள் சிதறி ஓடினார்கள்.



[illegible]

செஞ்சிலுவை பொறிக்கப்பட்ட வண்டி தன்னை நன்றாக வெளிப்படுத்திக் கொண்டு நின்றது. [illegible]

[illegible]

அதைப் பார்த்ததும் இனிப் பிரச்சினை இராது என்ற உணர்வு மனதில் ஒருவித அமைதியை ஏற்படுத்தியது.

வாசலில் சன நெருசல். சகுந்தலை எப்படியோ கோவிலின் உட்பிரகாரத்தில் நின்றாள். தந்தையின் காலடியில் குழந்தையை இறக்கிவிட்டு கைகளைக் கூப்பினாள். அவளும் கண்ணகியும் ஒன்றிப் போனார்கள்.

என்ன செய்வது...? [illegible]

சகுந்தலை சின்னவனைத் தூக்கி அணைத்தாள். சங்கரன் மகனை அணைத்தபடி மனைவியை இழுத்துக்கொண்டு ஓடினான்.

[illegible]

[illegible]

வில் ஒவ்வொரு முறையும்.

நேரம் செல்லச் செல்ல அவளது விழிகளில் கலவரம் படர்ந்தது. உடல் நடுங்கியது. அச்சத்துடன் பிரண்டு பிரண்டு பார்த்தாள். கண்களில் நீர் வழிந்தது. அழ முயன்று அடக்கித் தோற்றாள்.

[illegible]

இரு நாட்கள் கடந்து சென்றன.

[illegible]

## நெற்செய்கை கைவிடப்பட்டது

[illegible]

## நூல் வெளியீட்டிலிருந்து சில பகுதிகள்....

# காதோடு சொ

### தலைமையுரையிலிருந்து,

"மேஜர் பாரதியின் ஆயுதம் எவ்வாறு செயற்பட்டதோ, அதுபோன்றுதான் அவர் பேனாவும் செயற்பட்டது. அந்தப் பேனாவால், தனது நாட்டிலே நடக்கின்ற கொடுமைகளுக்கு எதிராக, தன் உணர்வுகளை எழுதிக்கொண்டார்."

■ தணிகைச்செல்வி

### வெளியீட்டுரையிலிருந்து,

"ஒரு போராளியின் உன்னதமான, உயர்ந்த எண்ணங்களில் வடிக்கப்பட்ட படைப்புக்கள் அவரின் நாட்குறிப்பேட்டுடன் நின்றுவிடுவதால் யாருக்கும் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. நாம், அவரது கருத்துக்களை அவரது படைப்புக்களூடாக மக்களுக்குச் சொல்லும்போது, மக்களில் ஏற்படப்போகும் மாற்றங்களை எண்ணிப்பார்த்தோம். அந்த மாற்றங்கள் இந்த மண்ணில் ஒரு பெரும் புரட்சியை முகிழ்க்கப்போவதால், எங்கள் தேசத்தை விடுதலை நோக்கிய பாதையில் 'விரைவுடன் இட்டுச் செல்லப்போவதால் அவரது ஆக்கங்களை நூலுருவில் கொண்டுவர முனைந்தோம். மேஜர் பாரதியவர்களின் எண்ணத்தில் பிறந்து, எங்கள் முயற்சியில் வெளிவந்தது தான் 'காதோடு சொல்லிவிடு' என்ற இந்த நூல்."

■ மலைமகள்





மேஜர் பாரதி

மன்னார் மாவட்டத்திலுள்ள சிறுநாவற்குள
இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில்
படைப்புக்களை உள்ளடக்கிய இந்நூல், 1
விக்னேஸ்வராக் கல்லூரியில் விடுதலைப்
வைக்கப்பட்டது. இந்நூலின் முதலாவது
பொறுப்பாளர் ஜெயா அவர்களால் மேஜர் பா

### சிறப்புரையிலிருந்து,

"மேஜர் பாரதி இந்த மண் ணோடு, மக்களோடு இந்த மண்ணிலே இருக்கின்ற, அல்லது இந்தச் சமூகத்திலே இருக்கின்ற விதவிதமான மனிதர்களோடு, உலக இயக்கத்தோடு தனது உறவை எப்படி ஏற்படுத்திக்கொண்டார், அல்லது இவற்றை எப்படிப் பார்க்க விரும்பினார் என்ற அவருடைய உள்ளுணர்வு காதோடு சொல்லிவிடு என்ற கவிதைத் தொகுப்பில் வருகின்றது.

■ சுடரவன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## சின்னக்கைகள்

கொஞ்சிக் குலவிடும் பிஞ்சுப் பருவம்
வஞ்சமிலா வெண் தூய நெஞ்சம்
அஞ்சி வேகவில்லை ஆதிக்கத்தீயினில் - நம்
பிஞ்சுப் பாதம் செல்லப் பதிந்து
இதோ — இவர்கள்

கைகள் சிறியவைதான்
கருவியின் கனத்தைத் தாங்கும் திறமைபெறவே
பயிற்சி முகாமில் பாய்கிறது முகாம்

வெற்று வேலிச் செந்தமிழ்ந்து எரிகையிலே
பிந்திவொரு அந்தியில் வெளிநாடு போகவில்லை
முந்திவொரு முனைந்திடும் காலகை - நம்
முந்தையோர் போல கொள்கைவழி சென்றிடும்.

# ஆய்வுரைகளிலிருந்து

### தேசத்தேவையின் பிரதிபலிப்பு

'ஒரு போராளிக்குரிய உறுதியும், ஒரு படைப்பாளிக்குரிய நெகிழ்வும் பாரதியிடம் காணப்படுகின்றது தன் எழுத்துக்களில் நேர்மை மிக்கவராகவும், துணிச்சல் மிக்கவராகவும் காணப்படுகின்ற பாரதியின் அறைகூவல்கள் எதிரிகளை அதிர வைக்கின்றன. இந்த அதிர்வு அலைகளை நாம் பல இடங்களில் உணரமுடிகிறது பாரதி பொறுப்புணர்வோடும், புரிந்துணர்வோடும் தன் படைப்புக்களை படைத்திருக்கின்றார் தான் வாழும் காலத்தில் தன் தேசத்திற்கு என்ன தேவை என்பதை உணர்ந்து இவர் தன் படைப்புக்களை எழுதியிருக்கின்றார். அதனால்தான் ஆழமாகவும், அழுத்தமாகவும் பேசிக் கொள்கின்றன இவரது படைப்புக்கள்.'

■ ஆதிலட்சுமி

பாரதி அவர்கள் தனது நாட்குறிப்பொன்றில் 'நான் ஏன் எழுதுகிறேன்?' என்று கேள்வி எழுப்பிவிட்டு 'நான் எனது கவிதைகள் புத்தகமாகவேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுதவில்லை' எனத் தெரியப்படுத்தி, 'நான் எனது அமைதிக்காக எழுதுகிறேன்; என் மனதைத் தொடுகின்ற சில துன்பமான நிகழ்வுகளை பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்ற ஓர் இதயத்தின் துடிப்புக்கள்தான் இந்த எழுத்துக்கள்' என்று கூறுகின்றார்.

இக் கூற்றில் ஓர் உண்மை புலப்படுவதை நாம் மறுக்கமுடியாது. போராளிகள் வித்தியாசமானவர்கள்; இவர்களைப் புரிந்துகொள்ளவோ, இவர்களின் உன்னதமான உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளவோ எல்லோராலும் முடிவதில்லை; இத்தகைய அறிவு சூன்யமான இந்த உலகத்திற்கு அவர்கள் எதையோ -சொல்லிவைக்கவேண்டி இருக்கிறது; இதனால் அவர்கள் எழுதவேண்டியது அவசியமாகின்றது.

அதே நாட்குறிப்பில் 'இந்த எழுத்துக்கள் நான் வாழும் இந்த சமூகத்தின் இதயத்தில் ஓர் சின்னத் துடிப்பை ஏற்படுத்தினால் அதுவே என் எழுத்தின் வெற்றியென நான் உணர்கிறேன்' என்று கூறியிருக்கின்றார்.

# சால்லிவிடு





மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா

என்னுமிடத்தில் 1992-06-07 அன்று சிறீலங்கா வீரச்சாவடைந்த மேஜர் பாரதி அவர்களின் -10-07 அன்று வடமராட்சியிலுள்ள கரவெட்டி புலிகள் மகளிர் அமைப்பால் வெளியிட்டு தி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் தியின் பெற்றோருக்கு வழங்கப்பட்டது. ■

## பல்கோணத்தோற்றம்

'ஒட்டுமொத்தமாக இந்த நூலை ஆய்வு செய்கின்றபோது, பாரதி, ஒரு போராளியாக நின்று போராளியின் உணர்வுகளைப் புரிந்து கொள்பவராகவும், ஒரு பெண்ணாக இருந்து பெண்ணின் உணர்வுகளைத் துல்லியமாக விளங்கப்படுத்தியவராகவும், மனிதாபிமானமுள்ளவராக நின்று சோவியத் யூனியனையும் ஐக்கிய நாடுகள் சபையையும் நோக்குபவராகவும், தன் அன்னை தேசத்தையும் அன்பான அம்மாவையும் அடிக்கடி நினைப்பவராகவும், விஞ்ஞானத்துறையுடன் இங்கே தமிழீழ மாணவர்களை வைத்து ஆய்வு செய்யும்போது விஞ்ஞான மாணவியாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கவித்துவம் வாய்ந்த போராளியாகவும் நின்று, இந்த இருபத்தெட்டு வயதெல்லைக்குள் இந்த அருமையான ஆக்கங்களைத் தன் கையெழுத்தாகத் தந்துவிட்டுச் சென்றுவிட்டார்.'

■ கலாநிதி

## காதோடு சொல்லும் செய்தி

'நாங்கள் சாவதை ஏற்றுக்கொள்வதில்லை. நாளை பிறப்பெடுத்து வருவோம் என்பதையும் எண்ண நினைப்பதில்லை. அதனாலேதான் இந்த மண்ணிலே வாழுகின்ற ஒவ்வொன்றையும் எங்களோடு இருந்தவர்களையும், வாழ்ந்தவர்களையும் நினைவு கூருகின்றோம். அவற்றுக்கூடாக அவர்களைக் காண்கின்றோம். அவற்றுக்கூடாக புத்துணர்ச்சியைப் பெறுகின்றோம். இந்த எண்ணம் தான் காதோடு சொல்லிவிடு என்ற கவிதையிலே வருகின்றது. அது ஒரு சிறப்பான கவிதை. கடலிலே போரில் வீரச்சாவு அடைந்த நிகழ்ச்சியைக் கூறுகிறது.

அன்னையை விட...
அவர்களை
அதிகமாக அணைத்தது
நீதானே

என்று கடலைப் பார்த்துக் கேட்டு ... தோடு இவர்களுக்களித்த இறுதித் தாலாட்டும், சாமரமும் உன்னுடையதுதானே என்று அந்தக் கடலைப் பார்த்துக் கேட்டு நீ கரையைத் தொடும்போது எம்மக்களுக்குக் காதோடு சொல்லிவிடு விடுதலையை வென்றெடுங்கள். அப்போது அவர்கள் வருவார்கள் என்று சொல்கின்றது. இந்தக் கவிதைப் புத்தகத்துக்கு காதோடு சொல்லிவிடு என்பது ... அது ... அவர்கள் வருவார்கள் என்பதை காதோடு சொல்லி ... என்று சொல்கின்றது.'

■ ...கரத்தினம் யோகி

நீளும் கருவி பகையை மாளவைக்கும்,
ஈழம் மீளும், இனம் வாழும் - அதற்காய்
வாலிபப் பருவம் வந்துவிடமுன்னரே
பாசறை வாசலில்சின்னதாய் இவர்கள் ....

இவர்களின் உடலில் குருதி பெருகலாம்.
உணர்வு இழக்கலாம், உயிரும் போகலாம்
எதிரிக்கு முன்னே எரியும் நெருப்பு
ஆதிக்கத்தீயை மட்டுமல்ல,
அடக்குமுறையையும் எடுத்தெறியும்.
சிறிய கரங்களில் உரமேறும் - இவை
ஈழம் மீட்கவே இடர் தாங்கும்.

■ உ. தயாலட்சுமி

## வேற்றுமொழிகளில் வரவேண்டும்

'எம்மவர்கள் இலட்சக்கணக்காக இன்று வேற்று நாடுகளிலே அகதிகளாக அடைக்கலம் புகுந்து வாழ்கிறார்கள். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தபோதிலும், ஆயிரக்கணக்கிலான அவர்களின் பிள்ளைகள் வேற்று மொழிகளையே தம் கற்கை மொழியாகக் கொண்டு கற்றுவருவதையே நாம் பார்க்கின்றோம். மண்ணின் மைந்தர்களுக்கென்று நினைவுறுத்தி, அறிவுறுத்தி மேஜர் பாரதியவர்கள் இந்த அழகிய கவிதை ஒன்றைப் புனைந்திருக்கின்றார். அவர்கள்தான் மண்ணை மறந்திருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகளாவது இத்தகைய உணர்வுகளைத் தங்களுடைய உள்ளத்திலே ஆராதித்து வளர்வதற்காக மகளிர் பிரிவைச் சார்ந்தவர்கள் கஸ்தூரி, வானதி, பாரதி போன்றவர்களின் கவிகளில் ஒரு சிலவற்றையாவது தமிழ் அல்லாத வேற்று மொழிகளில், குறிப்பாக ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இவை நிச்சயமாக எங்களுடைய வாரிசுகளுக்கு ஒரு சக்தியாக, அவர்களுடைய உள்ளத்தைத் தூண்டுகின்ற சக்தியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.'

■ சந்திரகாந்தன்

ஆம், பாரதியின் இக்கவிதைகள் இதுவரை உலகம் அறிந்துகொள்ளாத ஒன்றை அல்லது புரிந்துகொள்ளாத இன்னொன்றைப் புலப்படுத்தி நிற்பதோடு புரட்சி ஒன்று தேவை என்று சொல்லி நிற்கின்றன. அன்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் சிந்தனைக்கு கற்பனைக் கதாபாத்திரங்களைக் கருப்பொருளாக்கினான்; கவி நூறு எழுதினான்; காலத்தை வென்று உயிர்பிழைத்து நின்றான். ஆனால் இங்கே பாரதி நூறு கவிதையையே எழுதினாள். நாலுக்கும் கருப்பொருள் தானே ஆகினார் அன்றி கதாபாத்திரங்களைக் கற்பனையால் படைக்கவில்லை. கவிதையில் தொடங்கும் உண்மைப் பொருள் வாழ்வதற்காய் தன் உயிரையே தான் அளித்தார். பாரதி தன் கவிதையின் உயிரான உணர்வுகளை இங்கே பேனாவால் வடிக்கவில்லை, உதிரத்தால் தான் வடித்திருக்கின்றார். இவ்வாறு ஒப்புநோக்குகையில் அன்று கம்பன் வாழ்ந்த காலம் எங்கே? இன்று பாரதி வாழ்கின்ற காலம் எங்கே? இரண்டிற்கும் நிறையவே இடைவெளி இருக்கின்றது. இந்தக் கால வேறுபாடுகள் இரண்டும் இன்று தமிழீழத்தில் ஒரு மகத்தான புரட்சி முகிழ்த்திருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன. இந்தப் புரட்சி யுகத்தின் ஒப்பற்ற கவிஞர்களாகவே பாரதியோடு அவரின் தோழர்களான கஸ்தூரியின், வானதியும் தமிழீழ வரலாற்றில் எழுந்து நிற்கின்றார்கள்

(விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த 'கடரவன்' இந் நூலுக்கு எழுதிய முன்னுரையில் ஒரு பகுதி)




# வேவுப்புலி மேஜர் கார்வண்ணன்

யாழ் குடாநாட்டின் செம்மண் தோட்டவெளிகளையும் மணற்பரப்புக்களையும் ஆக்கிரமித்து அழிக்க காத்திருந்த யுத்த டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகளிடையே 1992 ஆம் ஆண்டு பிரசவித்தது ஈழ மண்ணின் வானப்பரப்பெங்கும் போர் மேகங்கள் கருத்தரித்திருந்தன. எந்நேரமும் பெரும் அனர்த்தங்களுடன் கூடிய போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியிருந்தது. யாழ் குடா நாட்டினை ஆக்கிரமித்து அழிவுகளைச் செய்வதற்காய் சிங்கள வெறியர்கள் அணிவகுத்து போர் வெறி முற்றிய தளபதிகளின் பின்னால் தயாராய் நின்றனர். குடாநாட்டின் தரைவழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு நாலாபுறமும் அன்னியரால் முற்றுகையிடப்பட்டது. பலாலிப் பெருந்தளமும், ஆனையிறவு வெற்றிலைக்கேணி இராணுவ வேலியும், சகல தீவக பிரதேசத்து இராணுவ குடியிருப்புக்களும், குடாநாட்டு மையத்தை குறிபார்க்க ஆரம்பித்தன. புனிதமான இத்தகைய பூமியை நசிக்க துடியாய்த் துடித்தன. சிங்களத் தளபதிகள் போர்ப் பிரகடனத்தையும், போர்ச் சவாலையும் விடுத்தபடியிருந்தனர்.

இன்னும் ஓர் மூலையில், ஈழத்தை காப்பதற்காய் புலி வீரர்கள் உயிரையே தூசாக்கி, புழுதி மணற் பரப்பிடையே இராணுவ வேலியை ஊடறுத்து, இராணுவ முன்னரண்புகளை முறிப்பதற்காக பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபடுகின்றனர். உதிரியின் பிரதேசத்தை அடையும் புலிவீரர்களோ துரதிர்ஷ்டவசமாக எதிரியால் இனங்காணப்பட்டு, உருவாகும் சண்டையில் உயிர்களை அர்ப்பணிக்கும் சமயம் அவர்களது உடலைக் கூட நாம் மீட்க முடியாது போய்விடும். இந்த வேளையிலும் புலி வீரர்கள் தம் இலக்குகளை விடாது தேடி வேவு வேலைகளைத் தீவிரப்படுத்துவர். அத்தகைய விசேட வேவுப் பிரிவின் ஒரு போராளி தான் பீற்றர். குடா நாட்டை கைப்பற்றுவோம் என நுன் உரைத்த இனவெறியர்களை முக்கிய சிங்கள தளபதிகளை, இராணுவ இயந்திரத்தை உயிரூட்டும் சக்திகளை ஒட்டு மொத்தமாக அழித்து ஆயிரக்கணக்கான தமிழரது உயிர்களையும், லட்சக்கணக்கான பெறுமதி கொண்ட ஈழ வளங்களையும் காப்பாற்றிய பெரும்பணியில் ஈடுபட்டவன் இவன்.

எமது தலைவர் கூறுகின்ற 'தோல்விகளைக் கண்டு பின்வாங்காதே. தோல்விகளில் வரும் தவறுகளைத் திருத்த முற்படுங்கள், வெற்றி கிட்டும். விடாமுயற்சியும், நம்பிக்கையும், ஆர்வமும் எமக்கு வெற்றியை ஈட்டித்தரும்' என்பதையே பீற்றர் செயல்வடிவில் மேற்கொண்டு தேசத் தலைவரிடமே பாராட்டையும், பரிசிலையும் பெற்றுக் கொண்டான்.

ஆம், பீற்றர், இவன் முன்னெடுத்துச் செல்லும் தாக்குதல்கள் யாவும் வெற்றியாக அமைவதுடன் எதிர்பார்க்கின்ற மிகப்பெரிய இலக்கையும், அடையச் செய்பவை. ஏனெனில் பீற்றர் எதையுமே செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், இடைவிடாத முயற்சியும், மிகுந்த திறமையும் உடையவன். இவனது இழப்பு எம்மிதயங்களை ஒரு கணம் உலுப்பி உள்ளத்தின் ஒவ்வொரு மூலையிலும் வலியைப் பரப்பியதொன்று. வரலாறு காணாத வெற்றியின் பின்னணியில் எம்மைத்தேம்ப வைப்பதாய், இவன் மரணம் அமைந்தது. இவன் இன்னமும் வாழ்ந்திருந்தால் இன்னமும் பலமான இலக்குகளை தகர்க்க வழிவகுத்திருப்பான், என எண்ணுகையில் இதயம் கனக்கின்றது.

அபார துணிச்சலோடு ஓய்வின்றி உழைக்கும் இவனது வரலாறு மிக நீண்டது. எம்மியக்கத்தில் முழுமையான போராளியாக இணைவதற்கு முன்னமே பல துணிச்சலான சாதனைகளை படைத்துள்ளான். இந்திய ஆக்கிரமிப்பு புயலிலும் போர் மழையிலும் எம் தேசம் தவிக்கையில் எமது போராட்ட வடிவத்தை மாற்றி தலைமறைவு கெரிலாப் போர் படையாக செயற்படுகையில் இவனது கிராமத்துக்குச் சென்ற அன்றே, இவனை சந்திக்க முடிந்தது. எதிரியின் தேடுதல் வலையிலிருந்து இவனது கிராமத்து மரங்களும், பசுமையான கனிகளும், பாசமான மக்களும் எமைக் காத்து அரவணைத்தமையை மறக்கமுடியாது. எமது வெற்றிக்கான தளங்களை அமைத்துத்தந்த தேசாபிமானிகளுள் இவர்களும் அடங்குவர். இவர்களும் எம்மை அரவணைத்ததோடு மட்டுமல்லாது எதிரியை அழிக்கும் வழிவகைகளை நாம் மேற்கொள்ள பீற்றர் பெருமளவு உதவினான். நாம் தலைமறைவாக இருந்த வேளை, வெளியில் சென்று சகல வேலைகளையும் மிகப் பொறுப்புடன் செய்து தருவதில் இவன் கண்ணாக இருந்தான். எவரையுமே சந்தேகமாக நோக்கும் அந்நியனின் கூடாரத்திற்கே சென்று அவனைப்பற்றிய பூரண தகவல்களை திரட்டுவதில் இருந்து, மக்களிடம் உணவைப் பெற்று எமக்குத்தருவது வரை, சகல பணிகளையும் முன்னின்று செய்பவன் இவன்தான்.

இச்சமயத்தில் எங்கே இவன் கைது செய்யப்பட்டு தாங்கொணா சித்திரவதையினால் எமை இனங்காட்டி விடுவானோ எனும் அச்சம் உள்ளூர எமக்கு எழுவதுண்டு. எத்தகைய மறைவிடங்களில் நாம் மறைந்திருந்தாலும் காலையில் பீற்றரில்தான் அனேகமாக விழிப்போம். அத்துணை ஆர்வமும் விவேகமும் உடையவன் அக்காலகட்டத்தில் நாம் அப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் மீதும், அடிவருடிகள் மீதும் நடாத்திய பல தாக்குதல்களில் அதிகமானவை பீற்றரினால் வேவுபார்க்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டவையாகும். ஆக்கிரமிப்பாளர்களை திகில் கொள்ளவைத்த இத்தாக்குதல்களில் முக்கிய பங்காளன். சயனைட் வில்லை அணியாது எதிரியோடு நட்பாகப் பழகி வீதிகளில் திரியும் இந்த பீற்றர் தான் என்பதை இறுதிவரை அந்நியர் அறியவில்லை.

இந்திய ஆக்கிரமிப்புக் காலம். ஒரு அதிகாலைப் பொழுது. இருளை மெதுவாக விரட்டிய வண்ணம் ஒளியேற்றிக் கொண்டிருந்த வேளை ஒரு பரந்த மரத்தின் அடிவாரத்தில் என்னைத் துயில் கலைத்து எழுப்பினான் பீற்றர். முந்திய தினம் படையினரால் அதிக தூரம் துரத்தப்பட்ட களைப்பு உடலை இன்னமும் விட்டகலாமல் சோம்பல் முறித்தவாறு. 'என்னடாப்பா?' இலேசான எரிச்சலோடு வினவினேன். 'அண்ணை முதலில் தேத்தண்ணியைக் குடியுங்கோ. முக்கியமான ஒரு விசயமிருக்கு' இனிய சிரிப்பொன்று தவழ்ந்தது. 'என்ன என்ன விசயம் கெதியில சொல்லு' அவசரப்படுத்தினேன்.

'அண்டைக்குச் சொன்ன மாதிரி நேற்றும் போய்ப்பார்த்திட்டன். அதோட அவனோட அரை மணித்தியாலம் இருந்து கதைச்சிட்டு பிறனையும் (L.M.G) தூக்கிப் பார்த்திட்டு வந்திட்டன். நம்ப முடியாதவாறு 'என்னன்டடா போனனீ' என்று வினவ, 'என்னமோ அவனுக்குக் கெட்ட காலமாக்கும். சினேகிதம் பிடிச்சாச்சு, அண்டைக்குப் பார்த்த வேம்புக்குக் கீழே பத்துப் பேர் தான் இருக்கிறான்கள். இஞ்சால மாமரமூலையில் 'பிறண்' கிடக்கு. கொஞ்சம் எட்டத்தில 'கால்கஸ்ரோ' (எறிகணை செலுத்தி) இருக்கு. ஏமலாந்திக் கொண்டு இருக்கிறான. வடிவாய் போய்க் குடுத்தா இனி உங்களைத் தேடமாட்டான்' உறுதியாக அவன் வார்த்தைகளைச் சிதற, நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். 'இனியும் நீங்கள் அடிக்காட்டி நான் பிறனைக் கொண்டு ஓடித்தான் வருவேன்'. அவனது உறுதியான பேச்சும் சிறந்த வேவும் எம்மை புது வேகத்துடன் ஒரு சண்டையை நடாத்த வைத்தன. ஒவ்வொரு பிரதேசத்திலும் சிதறி இருந்த எங்கள் வீரர்களை ஒன்று திரட்டி தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

அக்காலகட்டத்தில் எம்மில் ஒரு சிலர் தென்படினும் மக்கள் வீடுகளை விட்டு ஓடுவதும், அதனை எதிரி அறிந்து அங்கிரு தேசத்தை சல்லடை இடுவதினாலும், எமது மக்களின் முன்னால் கூட மறைந்து செல்லவேண்டி இருந்தது. இவ்வாறு இருக்கையில் ஒரு துணிகரத் தாக்குதலை எவ்வளம் நடாத்துவது? அதுவே எம் சிந்தனையை நிறைத்திருந்தது.

'அண்ணை உதுக்கு வழி ஒரு லொறி பிடிச்ச பொதுசனம் மாதிரி நைசாப் போய் அடிக்கிறதுதான். நான் லொறிக்கு முன்னால ஒரு நூற்றைம்பது யாரில் போய் நிலைமையைப் பார்க்கிறேன். சரியெண்டா அடியுங்கோ. இல்லாட்டி நைசா இறங்கி மாறுங்கோ. நான் எப்படியும் வந்திடுவன்' அவனது ஆலோசனைகள் ஏற்றதாக அமையவே அணிகளைத் தயார் படுத்தியபின் லொறி தேட ஆரம்பித்தோம். இறுதியில் ஒரு பிறேக் அற்ற (நகச்சுவையாக போத்துக்கேயரது என்போம்) லொறியே கிடைத்தது. மேஜர் சிறி சாரதி ஆசனத்தில் வெற்று மேனியோடு தலைப்பாகையோடு அமர்ந்திருக்க, நானும் அதே கோலத்தில் அருகில் அமர்ந்து கொள்ள பின்புறம் யாவரும் பதுங்கியிருந்தனர். 'அண்ணை இவன் சொல்வழி கேளாமல் முன்னுக்குப் போறான். அவன் கூப்பிட்டுக் கதைச்சான் என்டால் இவனும் வீணா மாட்டுப்படப் போறான்'. சிறி கூற நான் சிந்திக்கும் போது பீற்றர் உச்சஸ்மாக ஏதோ பாடலை முணுமுணுத்தபடி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான். 'கிட்ட வந்திட்டம் பிறேக்கை மெதுவாப் பிடி' என்று கூறினேன். சிறி பலம் கொண்ட மட்டும் அமத்தி இயலாது விட, தடதடத்த சத்தத்துடன் லொறி கட்டுப்பாடு இல்லாது மெதுவாக நெருங்கியது. சமீபத்தில் சென்று எதிரியைக் கடந்தவன், கையை உயர்த்தி தலையை சொறிந்தபடி செல்ல நாம் உசாரானோம். திடீரென எம்மிதயங்கள் நின்று இயங்கின. எமக்கும் பீற்றருக்கும் இடையாக வீதியின் விளிம்பில் திடீரென சுமார் பத்து இந்தியப் படையினர் ஒழுங்கையால் வந்து ஏறினர். அவர்களில் ஒருவன் அப்பகுதி படைப்பொறுப்பாளன். நிலைமை கட்டு மீறி விடவே சுமார் மூன்று யார் தொலைவில் நின்ற சில எதிரிகள்மீது கைக்குண்டை வீசி சண்டையை ஆரம்பித்து வைத்தோம். எதிர்பாராத தாக்குதலினால் எதிரிகள் கணப்பொழுது திகைத்தவேளை லொறியின் பக்கத்தினூடாக அம்பு போல பாய்ந்து எமது போராளிகள் தாக்கத் தொடங்கினர். நாம் எதிர்பார்த்ததைவிட அதிக எதிரிகள் நம் குண்டுமழையில் குளிக்கவேண்டி ஏற்பட்டது. எந்த போன்ற உறுதியுடைத்த எம் வீரர்கள் சடுதியாகப் பாய்ந்து தாக்க எதிரிகள் ஓட ஆரம்பித்தனர். சொற்ப நேரத்தில் அப்பகுதியை கட்டுப்பாட்டினுள் கொணர்ந்து 14 இந்திய இராணுவத்தைக் கொன்று 9 ஆயுதங்களையும் ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம்.

இச்சண்டையில் ஓர் உறுதிமிக்க இளம் வேங்கை கப்டன் தில்மன் வீரச்சாவெய்தி எம்மை மீளாச் சோகத்தில் ஆழ்த்தினான். நண்பனை இழந்த வேதனைச் சுமையோடும், வெற்றிப் பெருமிதத்தோடும் துரிதமாகப் பின்வாங்கினோம்.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்த வேளை எனக்கு அதிர்ச்சியும், கடுங்கோபமுமே ஏற்பட்டது. ஏனெனில் சந்தியிலே சைக்கிளில் சாய்ந்தவாறு சிறிதும் அச்சமின்றி பீற்றர் பார்த்துச் சிரித்தவாறு நின்றான். வெடிச் சத்தங்களின் விளைவாக நுனியமாகிவிட்ட பகுதியில் அவன் நிற்பதை என்னால் சகிக்க முடியவில்லை. இன்னும் சிறிதுநேரம் அவ்வாறு நிற்பின் நிச்சயம் சுற்றிவளைக்கும் எதிரிகள் அவனைக் குதறுவது உண்மை. உடனே துப்பாக்கியால் சுடுவேன் என்பதுபோல பாவனை காட்டி அவனை விரட்டினேன். பிற்காலத்தில் அதனைக் கூறி நாம் சிரிப்பது வழக்கம். இதனைப் போலவே இன்னும் பல சமயங்களில் நாம் எதிரியை அழிப்பதற்கு பெரிதும் உதவினான். மிருசுவில் பகுதியில் தேசத்துரோகிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலும், பீற்றரது அயராத முயற்சியும் சிறப்பான வேவுமே பெரும் வெற்றியை ஈட்டித்தந்தது.

அக்காலகட்டத்தில் புகையிரதப் பாதையை இந்தியப்படையினர் சங்கிலித் தொடராக நின்று பாதுகாக்கும்போது தேசத்துரோகிகளான ENDLF குழுவினர் கட்டாய பயிற்சிக்காக பிடிக்கும் இளைஞர்களை கிளிநொச்சிக்கு கொண்டுசென்று ஒப்படைத்த பின் பெரும் அட்டகாசம் புரிந்தவண்ணம் இருபுறமும் அந்நியப் படை கைகோர்த்து நிற்க எமது மக்களின் மீது சேட்டைகள் புரிந்தவண்ணம் செல்வது வழக்கம்.

நெடுநாளாக இதனை அவதானித்த பீற்றர். ஒரு தினம் எம்மிடம் மூச்சிரைக்க ஓடிவந்தான். அன்று வழமையை விட அரைமணிக்கு முன்னமே இராணுவத்தினர் முகாமிற்குச் சென்று விட்டமையால் நிச்சயமாக கிளிநொச்சிக்குச் சென்றுள்ள தேசவிரோதிகள் இதனை அறியாது வருவார் என்றும், அச்சமயம் அவர்களது கதையை முடிக்கலாம் என்றும் திட்டவட்டமாகக் கூறியதோடு இன்று நிச்சயம் தாக்க வேண்டும் என்றும் விடாப்பிடியாக நின்றான்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

## தமிழீழ அன்னை வீர அஞ்சலி

இன்று
தமிழீழ அன்னை
மௌனமாகத் தலைகுனிகிறாள்
நாணத்தால் அல்ல
எம்
தேச விடுதலைக்காய்
போன புதல்வர்கள்
வீடு திரும்பாது
வீரமரணமடைந்த
வரலாற்றின் நிகழ்வுகளை
நெஞ்சில் நிறுத்தி
வீர அஞ்சலிக்காய்
தமிழீழ அன்னை
மௌனமாக
தலை குனிகிறாள்

தமிழீழ வரைபடத்தை
உங்கள் குருதியால்
வரைந்து
வரித்துக் கொண்ட
இலட்சியத்திற்காய்
உண்மை விடுதலைக்காய்
உயிரை உவந்தளித்த
தியாகத்தின்
விளக்கக் குறிப்புகள்
நீங்கள்
எங்கள்
தேச விடுதலைக்காய்
உங்கள் தேகம்
சல்லடையாகிபது


மேஜர் பாரதி

# ஆனையிறவுப் பாதை திறப்பும் யாழ் குடாவின் பாதுகாப்பும்

**ஆனையிறவுப் பாதையை மக்கள் போக்குவரத்திற்காகத் திறந்துவிடத் தான் தயாராக இருப்பதாக, சிங்கள அரசு மீண்டும் அறிவித்துள்ளது.**

**முன்னரைப் போன்றே, 'பொதுமக்களின் நலனுக்காகவும்', 'மனிதாபிமானக் காரணங்களுக்காகவும்' என்று கூறிக் கொண்டு தனது நலன்களை -நோக்கங்களை அடைந்துவிட முயல்கிறது.**

**சிங்கள அரசின் இந்தத் தந்திரோபாய அரசியலை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். ●**



தமிழீழத்தின் ஏனைய பகுதியிலிருந்து யாழ் குடாவைத் துண்டிக்க 'இராணுவ வேலி' அமைப்பதற்காக, வெற்றிலைக்கேணி படைமுகாமிலிருந்து மூன்று முனைகளால் சிங்களப் படை நகர்த்தப்பட்ட பாதை

**1990** ஆம் ஆண்டு யூன் 10 ஆம் திகதி ஆனையிறவுப் பாதை மூடப்பட்டுவிட்டது என்பது, எல்லோரும் அறிந்ததே.

இதன் பின்னர் கேரதீவு - ஊரியான் பாதைகளினூடாகவும், நாமும், மக்களும் போக்குவரத்தைச் செய்து வந்தோம்.

1991 ஆம் ஆண்டு யூலை மாதம், ஆனையிறவுத் தளத்தைச் சுற்றி நாம் ஒரு முற்றுகையைச் செய்தோம். அதே மாதம் 10ம் திகதி தளத்தைக் கைப்பற்றுவதற்கான பெருந்தாக்குதலை ஆரம்பித்தோம். 800 இராணுவத்தைக் கொண்டிருந்த அத்தளம், ஒரு சில நாட்களில் எமது கையில் வீழ்ந்துவிடும் நிலையிலிருந்தது.

ஆனால், சிங்கள அரசு தனது முப்படைகளினதும் பலங்களை ஒருங்கு திரட்டி, ஒரு பெரிய படையெடுப்பை நடாத்தி வந்து, தளத்தைப் பாதுகாத்தது.

800 பேர் கொண்ட ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்க, 8000 பேர் கொண்ட பெரும்படை 14-7-91 அன்று வெற்றிலைக்கேணியில் தரையிறங்கியது. தரையிறக்கப்பட்ட படையினருடன் நாம் கடும்சமர் புரிந்தோம்.

வெடிகுண்டுகளை விதைத்துக் கொண்டு, அங்குலம் அங்குலமாக 12 கி.மீ. தூரத்திலிருந்த ஆனையிறவுத் தளத்தை நோக்கி நகர்ந்த படைகள், சுமார் 23 நாட்களின் பின்னர் தளத்தைச் சென்றடைந்தன.

இதையடுத்து ஒரு சில நாட்களில், மணலாற்றுக் காட்டுக்குள் சிங்களப் படைகள் படையெடுத்துச் சென்றன. தொடர்ந்து 27 நாட்கள், நாம் தொடுத்த தீவிர எதிர்த் தாக்குதலின் விளைவாக, சிங்களப் படைகள் பின்வாங்கிச் சென்றன.

ஆனையிறவு, மணலாற்றுச் சமர்களின் பின்னர் சிங்களப் படைத்துறைத் தலைமை, புதிய போர்முறைத் திட்டமொன்றை வரைந்து, அதை நடைமுறைப் படுத்த முயன்றது.

குடா நாட்டைச் சூழ ஒரு முற்றுகை வலையை விரித்து, புலிகள் மீது ஒரு இறுதிப் போரை நடாத்தி, போராட்டத்தை ஒடுக்குவதே அத்திட்டமாகும்.

இதில் முதல் கட்டமாக 17-10-92 அன்று காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட சிங்களப் படைகள் ஊர்காவற்றுறை, மண்டைதீவு வழியாக பூநகரி வரை முற்றுகை வலையை விரித்து கேரதீவு -சங்குப்பிட்டிப் பாதையைத் தடை செய்தன.

இதேபோன்று 28-06-92 அன்று வெற்றிலைக்கேணியிலிருந்து கிளம்பிய சிங்கள இராணுவம், ஆனையிறவுத் தளம் வரை ஒரு இராணுவ தொடர் வேலியை அமைத்து, கொம்படி -ஊரியான் பாதைகளைத் தடைசெய்தன.

குடாநாட்டிற்கான சகல பாதைகளையும் மூடிவிடுவதன் மூலம், புலிகளின் நகர்வைத் தடுத்து நிறுத்தி, அவர்களின் போரிடும் சக்தியைச் சிதைத்து விடலாம் என்பதுதான், குடாநாட்டு முற்றுகைக்கான பிரதான இராணுவ நோக்கமாகும்.

வெற்றிலைக்கேணித் தளத்திலிருந்து ஆனையிறவுத்தளம் வரை அமைக்கப்பட்ட இராணுவ வேலியில், சுமார் 8000 படையினர் குவித்து வைக்கப்பட்டுள்ளனர்.

கல்முனையிலிருந்து பூநகரிவரை அமைக்கப்பட்ட இராணுவ வேலியில் சுமார் 2000 படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விதம் சுமார் 10,000 படையினரைக் கொண்டு, குடாநாட்டுக்கான போக்குவரத்தைத் தடுத்து நிறுத்த, அரசு முயன்றது. ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இப்போதும் கிளாலியூடாக கடல் நீரேரியில் பயணம் செய்து நாமும் மக்களும், போக்குவரத்துக்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதன் காரணமாக திட்டமிட்டபடி, சிறீலங்கா அரசானது தனது இராணுவ நோக்கை நிறைவேற்ற முடியாது போய்விட்டது. அத்துடன் [illegible] தடை செய்ய [illegible] படையினரும் இந்த இராணுவ வேலிகளில் பிரயோசனமில்லாது முடங்கிக் கிடக்கின்றனர்.

ஆனால், குடாநாட்டைச் சூழ சிங்களப் படைகள் இட்டுள்ள முற்றுகையை உடைத்தெறியும் நோக்குடன், நாம் புதிய போர் உபாயமொன்றை வரைந்தோம். அதன் ஒருபகுதியாக இந்த இராணுவ வேலிகளில் ஆங்காங்கே தாக்குதல்களை நடாத்தி, இராணுவ வேலிகளைச் சிதைக்க முயன்றோம்.

30-12-91 அன்று பூநகரிக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட கடல் நீரேரியில் ரோந்து சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் படகு அணிமீது தாக்கினோம். இத்தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன், ஒரு படகும் மூழ்கடிக்கப் பட்டது.

03-02-92 அன்று, ஆனையிறவுக் கடல்நீரேரியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின், 41 அடி நீளமான அதிவேக நீருந்து விசைப்படகைக் கண்ணிவெடிமூலம் தகர்த்தோம். அதிலிருந்த 4 படையினர் கொல்லப்பட்டனர்.

20-02-92 அன்று பூநகரிக்கு அண்மையில் மாண்தீவில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் மீது, கடற்புலிகளின் சிறப்பு அதிரடிப் படையினர் நிகழ்த்திய தாக்குதலில், 7 படையினர் கொல்லப்பட்டதுடன், 7 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

10-03-92 அன்று பூநகரிக்கு அண்மையில் மட்டுவில்நாடு என்னுமிடத்தில் நாம் தாக்கி, ஒருவரைக் கொன்று, அவரின் ஆயுதத்தையும் கைப்பற்றினோம்.

29-03-92 அன்று பூநகரி - கறுக்காய்த் தீவில் இராணுவக் காவலரண்கள்மீது தாக்கினோம். இதில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன், 7 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

09-06-92 அன்று பூநகரியில் எமது சிறப்பு [illegible] நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில், ஒரு இராணுவ வண்டி சிதறியது. அதிலிருந்த கேணல், லெப். கொமாண்டர், கப்டன் நிலைகளிலான மூன்று படை அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

28-08-92 அன்று [illegible] வாயில் ஒரு திடீர்த் தாக்குதலை தொடுத்து பல காவலரண்களை அழித்தோம். இதில் 10 படையினர் கொல்லப்பட்டனர். 12 ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

அதன் பின்னர் 25-08-92 அன்று பூநகரிப் பகுதியில் இருந்த இராணுவ வேலி மீது ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி, 62 காவலரண்களைத் தகர்த்து 25 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றிருந்தோம். நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் காவலரண்களை விட்டு ஓடியிருந்தனர்.

மறுநாள், பூநகரியில் திரும்பவும் ஒரு தாக்குதலை நடாத்தி 4 படையினரைக் கொன்று 5 ஆயுதங்களைக் கைப்பற்றினோம். 14.5 MM2 PU-2 ரக கனரகத் துப்பாக்கியும் அழிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல 01-10-92 அன்று கட்டைக்காட்டில் ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி, சுமார் 3 கி.மீ. நீள இராணுவ வேலியை உடைத்தெறிந்தோம்.

30க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட இத்தாக்குதலில் 207 ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன், சுமார் 3 இலட்சம் ரவைகளையும் ஏராளமான வெடிப் பொருட்களையும் இரு இராணுவ வண்டிகளையும் கைப்பற்றியிருந்தோம். இந்த அரும் சாதனை இராணுவ வேலியையும் [illegible] காணச் செய்துவிட்டது.

இவ்விதம் இராணுவ வேலியானது ஆபத்துக்குள் சிக்கியுள்ள இவ்வேளையில், மழை காலமும் தொடங்கிவிட்டது. இதனால் இன்னும் சில நாட்களில் ஆனையிறவுக் கடல்நீரேரியில் [illegible] வெற்றிலைக்கேணி-ஆனையிறவுப் பகுதி வெள்ளக் காடாகிவிடும். இதனால் இப்பகுதியிலுள்ள இராணுவ வேலி வெள்ளக்காடாகி விடும்.

இராணுவ வேலி, [illegible] நிலைகளினால் ஆங்காங்கே துண்டாடப்பட்டுவிடும். துண்டாடப்பட்ட பகுதிகள் புலிகளின் பாய்ச்சலுக்கு உட்படும். இராணுவம் பெரிழப்புக்களைச் சந்திக்கும் என்பது படைத்துறைத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இத்துடன் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குச் சிங்களப் படைக்குப் பேருதவி புரியும் டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் என்பவற்றை நீரும் சகதியும் நிறைந்த அப்பகுதியில் பயன்படுத்த முடியாமல் போய்விடும். இதனால் சிங்களப் படை பாரிய இராணுவத் தோல்விகளைச் சந்திக்கலாம் என, சிங்களத் தளபதிகள் அஞ்சுகிறார்கள்.

இந்நிலையில் வெற்றிலைக்கேணி - ஆனையிறவு இராணுவ

தொடர்ச்சி 11ம் பக்கம்.....



# நிகழ்வும் நினைவும்

- திலீபன் -

## 'இராணுவ பலம்' வெறும் இராணுவ வாதமா ?

விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட, மாறுபட்ட உத்திகளை உள்ளடக்கிய இராணுவ நகர்வுகளினால் சிறீலங்கா ஆயுதப்படையினர் எத்தகைய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற முடிவினை எடுக்க முடியாமல் தடுமாறுகின்றனர் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்பான உத்திகளை வகுப்பதில் உயர் அதிகாரிகளிடையே பெரும் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஒரு அரைகுறைத் தீர்வுடன் சிதைத்துவிடும் நோக்கினைத் தன்னகத்தே கொண்ட சிறீலங்கா ஆயுதப்படைகளின் இராணுவ நடவடிக்கைகளில் இன்று ஒரு ஸ்தம்பித நிலை தோன்றியுள்ளதுடன், விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் ஆயுதப்படையினர் மத்தியில் பெரும் இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 11ம் திகதி வெடித்த இரண்டாம் கட்ட ஈழப்போரில் கொல்லப்பட்ட, படுகாயமடைந்த, தப்பியோடிய வகையில் 18,000 க்குக் குறையாத படையினரை சிறீலங்கா இராணுவ தரப்பு இழந்துள்ளதாக அரச தரப்பிலிருந்தே தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை இராணுவ ரீதியில் நசுக்கிவிட முடியாது என்பதனை விடுதலைப் புலிகள் உறுதியாக நிரூபித்துள்ளதுடன் அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தைக்கு வருமாறும் சிறீலங்கா அரச தரப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இச்சூழலில், இராணுவ ரீதியாக ஒரு போராட்டத்தினை நசுக்கிவிட முடியாத அளவுக்கு அதனை வளர்த்தெடுத்தலில் முக்கியத்துவம் குறித்த நினைவுகள் என்னுள் எழுந்தன.

ஒடுக்கப்பட்ட மக்களுடைய உணர்வுகளை மதித்து ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு உரிமைகளை ஒடுக்குமுறையாளன் வழங்கியதாக வரலாற்றில் நாம் உதாரணங்களை காணமுடியாது. ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் தமது போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளை வென்றெடுத்திருக்கின்றனர் என்பதே வரலாறு.

மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடும் போது ஒடுக்குமுறையாளன் கொடுமையான முறையில் அப்போராட்டங்களை ஒடுக்கமுயல்கிறான். போராடும் மக்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயத்தன்மை மட்டும் அம்மக்களுக்கு வெற்றியினைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி, ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி போராட்டம் ஒடுக்குமுறையாளனால் நசுக்கப்படுமானால், மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாதவர்களாகத் தோற்கடிக்கப்பட்டுவிடுவர். எனவே போராட்டத்தினை எதிரி ஒடுக்கமுடியாத அளவிற்கு உறுதியான முறையில் முன்னெடுத்தல் என்பது மக்களின் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை வென்றெடுப்பதற்கு இன்றியமையாததாக அமைகின்றது.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் தோல்வியடைந்ததாக வரலாறு இல்லை என்று குறிப்பிடுவோர்கள். ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் போராட்டம் ஒடுக்குமுறைகளைத் தாண்டி வளரும், வெல்லும் என்ற அடிப்படையில் கூறப்படும் இக் கூற்று, வரலாற்றில் ஒரு சில கசப்பான அனுபவங்களையும் கவனத்திற் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

ஒரு மக்கள் கூட்டம் நடாத்திய போராட்டம் தனது இலக்கினை அடையாது முறியடிக்கப்பட்டமையினையும் சிதைக்கப்பட்டமையினையும் வரலாறு தனது பக்கங்களிலே பதிந்துதான் வைத்துள்ளது. இவ்வாறு இப்போராட்டங்கள் முறியடிக்கப்பட்டமைக்கும், சிதைக்கப்பட்டமைக்கும் போராட்டத்தரப்புத் தவறுகளும் காரணமாக இருந்திருக்கின்றன. ஆனால் ஒடுக்குமுறையாளன் தனது முழுப்பலத்தினையும் பிரயோகித்து தொடுக்கும் இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதாரத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாதமையே இப்போராட்டங்களின் தோல்விக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

வரலாற்றை நாம் நோக்கும்போது தோல்வி கண்ட போராட்டங்களின் நினைவுகள் எமக்கு படிப்பினையாக அமைகின்றன. இந்திய இராணுவ ஒடுக்குமுறையினால் நசுக்கப்பட்ட தெலுங்கானா விடுதலைப் போராட்டம்; கொடுமையான முறையினால் முறியடிக்கப்பட்ட மலேசியக் கம்யூனிஸ்ட்டுகளின் போராட்டம்; நைஜீரியாவில் தனிநாடு பிரகடனம் செய்து, ஒரு சில நாடுகளின் (நான்கு ஆபிரிக்க நாடுகளின்) அங்கீகாரத்தையும் பெற்று பொருளாதாரத்தடை காரணமாக ஏற்பட்ட பட்டினி நிலையின் ஊடாகத் தோற்கடிக்கப்பட்ட 'பயரா' போராட்டம்; இந்தியாவில் எழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டு, இராணுவ ஒடுக்கு முறையினூடாகச் சிதறடிக்கப்பட்டு சிறு சிறு குழுக்களாக உடைக்கப்பட்ட நக்சலைட்டுக்களின் போராட்டம் இப்படியாக எதிரியினால் நசுக்கப்பட்ட அல்லது சிதைக்கப்பட்ட போராட்டங்களை வரலாறு தன்னகத்தே கொண்டுதான் உள்ளது.

தென்னிலங்கையில் தோற்றம் பெற்ற JVP போராட்டம் 1971 இல் சிதைக்கப்பட்டது. பின் 1987, 1988, 1989 களில் மீண்டும் முனைப்படைந்து மீண்டும் சிதைக்கப்பட்டது. JVP தலைவர் றோகண விஜேவீர உட்பட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர். மீண்டும் ஒருமுறை JVP முனைப்புறும் [illegible] வேளைகளில் மீண்டும் நசுக்கப்படலாம்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நான் இவற்றையெல்லாம் இங்கு குறிப்பிடுவது இப்போராட்டங்களை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிடுவதற்கல்ல. ஒவ்வொரு போராட்டமும் தனக்கேயுரிய தனித்துவமான அகபுறக் காரணிகளைத் தம்மகத்தே கொண்டவை. அதேபோல் தமிழீழ விடுதலைப் போராட்டமும் தனித்துவமான பல, அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது.

மாறாக, நான் இப்போராட்டங்களையெல்லாம் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் இராணுவ ரீதியில் போராட்டம் நசுக்கப்படும்போது அப்போராட்டம் தனது இலக்கினை அடையாது சிதைந்து விடுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டவே போராட்டத்தின் இலக்கு, போராட்ட வழிமுறைகள் ஆகியவை குறித்து சரி, தவறு என்ற விவாதங்களுக்கப்பால் அப்போராட்டம் இராணுவ ரீதியில் ஒடுக்கப்பட்டால் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூட்டம் தோல்வியினைத் தழுவிக் கொள்கின்றது என்பதனை இடித்துரைக்கவே (மனித குல வரலாற்றில் சரி, தவறு என்பவற்றை அவரவர் கொண்டுள்ள தத்துவார்த்தங்களும் அம்மக்கள் சமூகத்தின் விழுமியங்களுமே தீர்மானிக்கின்றன.)

இந்த வகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் நசுக்கி விட முடியாது என்பதனை நடைமுறையில் விடுதலைப்புலிகள் நிரூபித்து வருகின்றமை, தமிழீழ மக்கள் தமது அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்கி வருகின்றது. இன்னொரு வகையில் கூறுவதாயின் இராணுவ ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட முடியாத அளவுக்கு வளர்ந்து நிற்பதனால் இப்போராட்டத்தின் இலக்கு சிதைக்கப்பட முடியாததாக உள்ளது.

இவ்வளர்ச்சி மிகச் சாதாரணமாக அடையப்பட்ட ஒன்றல்ல. உறுதியான தலைமைத்துவத்தாலும் அர்ப்பணிப்பு மிக்க போராளிகளாலும் போராட்டத்தினைத் தமது தோள்களிலே தாங்கி நிற்கும் தமிழீழ மக்களின் உறுதியான பங்களிப்பினாலுமே இவ்வளர்ச்சி சாத்தியப்பட்டது.

1987 க்கு முன்னர் சிறிலங்கா அடக்குமுறை இயந்திரத்தினை எதிர்த்து நின்றமை; 10-10-1987 இல் இருந்து உலகின் நான்காவது பெரிய இராணுவ இயந்திரமாகிய இந்திய இராணுவத்தினை எதிர்த்து வளர்ந்தமை; 11-06-90 இல் வெடித்த இரண்டாம்

தொடர்ச்சி 11ம் பக்கம்.....

## மன்னார் மாவட்டத்தில் பெருமளவு மக்கள் கைது

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட 'அதிவேகத் தாக்குதல்' நடவடிக்கையினைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்த நூற்றுக் கணக்கான பொதுமக்களைத் தேசத்துரோகிகளுடன் இணைந்து இராணுவம் கைது செய்துள்ளது.

பெரிய கட்டைக்காடு, இலகடிப்பிட்டி, புதுக்கமம், முதலைக்குத்தி, காத்தான்குளம் ஆகிய பகுதிகளில் சிக்கியிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் வயல்களில் வேலைகளில் ஈடுபட்டிருந்தோரையும், கோயில்களில் தங்கியிருந்தோரையும் வயது வேறுபாடின்றி கைது செய்து கொண்டு சென்றனர்.

மேற்படி பொதுமக்களைக் கைது செய்த இராணுவத்தினருக்கு புளொட், ரெலோ போன்ற தேச விரோதிகளுடன் முகமூடி அணிந்தோரும் உதவிபுரிந்ததாக தப்பித்து வந்தவர்கள் தெரிவித்தனர். ■

## குடாநாட்டு அகதிக் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் இருப்பிட வசதிகள்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குடாநாட்டிலிருந்து கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த அகதிகளுக்கு தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டைச் சேர்ந்த அகதிகளில் தற்போது கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிளிநொச்சி கரடிப்போக்கு பௌத்த விகாரைக் கட்டடத்தில் 40 குடும்பங்களும், இராமநாதபுரத்தில் 21 குடும்பங்களும், கிருஷ்ணபுரம் நலன்புரிச் சங்கத்தில் 15 குடும்பங்களும், அக்கராயன்குளம் நலன்புரிச் சங்கத்தில் 102 குடும்பங்களும் தங்கியுள்ளன.

தற்போது இவர்களுக்கான முழு நிவாரணமும் கடந்த மாதம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களுக்கு கொட்டில்களை அமைத்துக் கொடுக்கத் தேவையான நிதி விபரம் அரசாங்க அதிபர் திரு பொன்னம்பலத்தின் கவனத்திற்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபரினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளில் ஒரு தொகையினர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நாச்சிக்குடாவிலும் தங்கியுள்ளனர். ■

## அராலிப் பகுதியில் மீனவர் தொழில் இன்றிப் பாதிப்பு

■ படையினர் தினமும் துப்பாக்கி வேட்டு

அராலி மேற்குக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் தொழில் இன்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

காரைநகரில் நிலைகொண்டுள்ள படையினர் கடந்த சில தினங்களாக அராலிக் கடல் பகுதியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதே இதற்குக் காரணம் ஆகும். இதனால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்து வந்து அராலிப் பகுதியில் தங்கி இருப்போர் ஆவர்.

இரவு நேரங்களில் 7-00 மணிக்கும் 9-00 மணிக்கும் இடையில் தினமும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ■

## சூனியப் பிரதேசங்களாக திருமலை தமிழ்க் கிராமங்கள்

திருமலை மாவட்டத்தில் உள்ள இறக்கக்கண்டி, புடவைக்கட்டு, கன்னம்பச்சை, குச்சவெளி போன்ற இடங்கள் மக்கள் நடமாட்டமற்ற சூனியப் பிரதேசங்களாக உள்ளன. தென் தமிழீழத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் இத்தகவலைத் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 80 சத வீதமான பிரதேசங்கள் வெறுமையாகவே காணப்படுகின்றன. சில இடங்களில் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் மக்கள் தங்கியுள்ளனர்.

நிலாவெளி, திரியாய், சாம்பல்தீவு, மூதூர் பகுதிகளிலும் குறைந்த எண்ணிக்கையான மக்களே வாழ்கின்றனர்.

திருகோணமலையில் தற்சமயம் தீவிர சிங்களக் குடியேற்றம் இடம்பெறும் பகுதியாக அல்லைகந்தளாய் வீதி காணப்படுகின்றது. அத்துடன் திருகோணமலை நகரப் பகுதியில் திருக்கடலூர், லிங்கநகர் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

புடவைக்கட்டு, சலப்பையாறு பகுதிகளில் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் பிரதேசமான புடவைக்கட்டு சாகரபுர என்று பெயர் மாற்றப்பட்டு, அங்கு 'சாகரபுர மீனவர் குடியேற்றத்திட்டம்' ஒன்று சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ■

## மண்டபங்கள் திறப்பு

வடமராட்சி கிழக்கில் தற்காலிக பாடசாலை மண்டபங்கள் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டன. இப்பாடசாலை மண்டபங்களுக்கு மாவீரர்களின் பெயர்களும் சூட்டப்பட்டன. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கடற்புலிகளின் விசேட தளபதி சூசை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் (கடற்புலிகள்) பாண்டியன், வடமராட்சி கிழக்கு பிரதேசச் செயலர் திரு கே. கேதீஸ்வரன், நாகர்கோவில் பிரதிக் கொத்தணி அதிபர் திரு ப. இராசநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ■

# மீராவோடை பாடசாலைக்கு தமிழ்மாணவர் செல்ல அச்சம்

வாழைச்சேனைப் பகுதியில் தமிழ், முஸ்லீம் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மீராவோடை பாடசாலை மீண்டும் அக்கட்டடத்திலேயே இயங்கத் தொடங்கியுள்ள போதிலும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

1990 யூன் மாதத்தில் தொடங்கிய அசம்பாவிதத்தினைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் அயல் கிராமங்களிலேயே இன்றும் அகதிகளாகத் தங்கியுள்ளனர். சொந்த இடங்களுக்கு இன்னும் மீளக்குடியேறவில்லை. இதனால் மீராவோடை தமிழ்ப்பாடசாலை பன்றிமடு என்ற இடத்திலேயே தற்காலிகமாக இயங்கிவந்தது. மீளக்குடியேறவே அஞ்சுகின்ற நிலையில் மீராவோடை தமிழ்ப் பாடசாலையை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது குறித்து அச்சம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வாழைச்சேனை கோட்ட உதவிப் பணிப்பாளர் குழு ஒன்று அப்பகுதிக்குச் சென்றபோது பெற்றோர் இதுதொடர்பாக ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

வீடுகள் உடைக்கப்பட்டு பாடசாலைக் கட்டடம் மட்டுமே அரைகுறை நிலைமையில் எஞ்சியிருக்கும் இப்பகுதிக்கு அருகிலேயே ஊர்க்காவல் படையினரின் காவலரண்களும் உள்ளன. இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை கடந்த கால சம்பவங்களே உணர்த்தியுள்ளன. இந்நிலையில் இப்பாடசாலைக்கு எவ்வாறு எமது பிள்ளைகளை அனுப்புவது? இப்பாடசாலையை மீராவோடை ஆஸ்பத்திரிக்கட்டடத்திற்காவது மாற்றித்தரும்படி பெற்றோர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ■

## ஆனையிறவுப்....

வேலியை அகற்ற வேண்டிய கட்டாயம், சிங்களப்படைத்துறைத் தலைமைக்கு எழுந்துள்ளது. ஆனால் இந்த இராணுவ வேலி அமைக்கப்பட்டதன் நோக்கம் அடையாமல் (குடா நாட்டைக் கைப்பற்றுவது) இராணுவ வேலியை அகற்றினால், அது சிங்களப்படையின் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்திவிடும் என, அரசும் அஞ்சுகிறது.

இராணுவ வேலி அகற்றப்படுவதற்கும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கும் என்ன தொடர்பு என்றொரு கேள்வி எழலாம்.

இந்த இராணுவ வேலியூடாகத்தான் ஆனையிறவுத் தளத்திலுள்ள சுமார் 2000 படையினரது தேவைகள் சென்றடைகின்றன. உணவு சமைப்பதற்கான விறகுகள் உட்பட எல்லாப் பொருட்களும், ஆயுதத் தளபாடங்களும் இவ்வேலியூடாகவே அனுப்பப்படுகின்றன.

இந்த இராணுவ வேலியில்லாவிடின், அனைத்து விநியோகங்களும் வான்வழி மூலம்தான் நடைபெற வேண்டும். ஆனால் இது சாத்தியமில்லை. ஏனெனில் முன்னர் 800 பேருடன் ஆனையிறவுத் தளம் இருந்த போதே, வான்வழி விநியோகங்களை மேற்கொள்ள சிறீலங்கா அரசு பெரும்பொருட் செலவைச் செய்ததுடன் பெருஞ் சிரமத்தையும் சந்தித்தது. ஆனால், இப்போது ஆனையிறவுத் தளம் விஸ்தரிக்கப்பட்டு 2000 பேரைக் கொண்டிருக்கிறது. இப்பெரும் தொகையினரின் தேவைகளை வான்வழி மூலம் நிறைவேற்றும் சக்தி, சிறீலங்கா வான்படைக்கு இல்லை.

அப்படியானால் ஆனையிறவுத் தளத்தின் ஆட்பலத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். ஆட்பலக் குறைப்பு என்பது தளத்தின் அழிவுக்குத் தான் இட்டுச் செல்லும் என்பது, அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஆகவே, சிறீலங்கா அரசைப் பொறுத்தளவில், வெற்றிலைக்கேணி -ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றவும் வேண்டும். அதேசமயம் ஆனையிறவுத் தளத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவும் வேண்டும். அத்துடன், தான் ஒரு இராணுவத் தோல்வியைச் சந்தித்ததாக வெளிப்படையாகக் காட்டவும் கூடாது.

இந்த விருப்புக்களை ஒரே எத்தனிப்பில் அடையும் நோக்குடனேயே சிங்கள அரசு, இந்த பாதை திறப்பு என்ற தந்திரோபாய நாடகத்தை அரங்கேற்றி, ஒரு நெருக்கடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முனைகிறது.

புலிகளின் சம்மதத்துடன் ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிட்டால், ஆனையிறவுத் தளத்தைச் சூழ பாதுகாப்புப் பகுதியென இணக்கம் கண்டுவிட்டால்,

1. வெற்றிலைக்கேணி -ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றுவதற்கு சிறீலங்கா அரசுக்கு ஒரு சாட்டும், அதற்குரிய நியாயங்களும் கிடைத்துவிடும்.
2. ஆனையிறவுத் தளமும் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டுவிடும். எனவே குறைந்த படையினருடன் தளத்தைப் பராமரிக்கலாம்.
3. வேண்டிய பொருட்களைத் தரைப்பாதையினூடாகச் செல்லும் வாகனங்களிலிருந்து இறக்கிக் கொள்ளலாம்.
4. அகற்றப்படும் இராணுவ வேலியிலிருந்து கிடைக்கும் படையினரைப் பயன்படுத்தி, பலாலித் தளத்தை மேலும் விஸ்தரித்து, குடா நாட்டில் மேலும் நிலங்களை ஆக்கிரமிக்கலாம்.
5. தருணம் வரும்போது போக்குவரத்து வாகனங்களையே பாவித்தும், பிரயாணிகளைக் கேடயமாகப் பயன்படுத்தியும், குடா நாட்டிற்குள் படையைக் கொண்டு நுழையலாம்.

ஆனையிறவுப் பாதை திறப்புப் பற்றிய அரசின் அறிவித்தலின் பின்னால் உள்ள தந்திரோபாய அரசியலை, எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இத் தந்திரோபாய நகர்வைத் தோற்கடித்து, சிங்கள அரசிற்கு ஒரு இராணுவ நெருக்கடியைக் கொடுத்து, குடாநாட்டு மக்களைச் சிங்களப் படைவெடுப்பிலிருந்து பாதுகாப்பதற்காகத்தான், ஆனையிறவுப் பாதையை திறக்க நாம் சம்மதம் தெரிவிக்கவில்லை.

பூநகரி, கொம்படி, ஊரியான் பாதைகள் சிங்களப் படைகளினால் தடுக்கப்பட்ட பின்னர், குடா நாட்டு மக்கள் படும் தாங்கொணாத் துன்பங்களை நாம் நன்கு அறிவோம்.

ஆனாலும், இதுவரை நாளும் எமது போராட்டத்தை வளர்ப்பதற்காக எம்முடன் சேர்ந்து எமது மக்கள் சுமந்த துன்பங்களை இன்னும் சிறிது காலத்திற்கு ஏற்று, நிரந்தர நன்மைகளையும் மகிழ்ச்சிகளையும் அனுபவிப்போம். ■



## விழுதுகள்......

சந்தர்ப்பத்தை நழுவவிடாது நாம் எமது தாக்குதல் அணியைத் திரட்டி மிகச்சிறப்பாக தாக்குதலைத் தொடுத்தோம். இதன் போது இரு மினிபஸ்களில் அட்டகாசமாக வந்த தேசத் துரோகிகளில் 14 கொடியவர்கள் கொல்லப்பட்டு பெருமளவு நவீன ஆயுதங்களையும் ஏராளமான ரவைகளையும் கைப்பற்றி பெருவெற்றி பெற்றோம். இந்த வெற்றிகரமான தாக்குதலின் பின்னணி எங்கள் அன்புக்குரிய பீற்றர்தான். இந்த சம்பவங்களால் எம்மிடையே ஆழமாகப் பதிந்துவிட்டான், இவன் இந்தியப்படைகள் இங்கிருந்து வெளியேறவும் இவன் எம்படையணியில் இணைந்து பயிற்சிபெற்று நடைபெற்ற பல சண்டைகளில் முன்னணி வீரனாகத் திகழ்ந்தான். இவ்வேளைகளில் இருமுறை விழுப்புண் பட்டான். இவனது வியத்தகு செயற்திறன்களால் யாழ். மாவட்ட விசேட வேவுப்பிரிவினது பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அக் [illegible] தனது திறமை செயற்பாடுகளினால் எதிரியை திணறடிக்கச் செய்தான்.

1. 10. 92 அன்று கட்டைக்காட்டுப் பகுதியில் எதிரியினது காவலரண்களை ஊடறுத்துத் தாக்கி பெரும் வெற்றியை ஈட்டி, எதிரியினது ஆயுதக்கிடங்கினைக் கைப்பற்றி, ஏராளமான ஆயுதங்களை மீட்டெடுத்த சரித்திர நிகழ்வில், எங்களது பீற்றர் தீரமாக போராடி விழுப்புண் ஏற்று களப்படுக்கையில் சாய்ந்தான். களப்படுக்கையே அவனது மரணப்படுக்கையாக இருக்கும் என்பதை எங்களால் அன்று ஊகிக்க முடியவில்லை. ஓர் தூய்மையான உறுதிமிக்க துணிவுகொண்ட கொண்ட லட்சியம் விட்டிடாத எங்கள் மைந்தன் நிரந்தர ஓய்வெடுத்துக் கொண்டான்.

அவனை நான் இறுதியாக சந்தித்தவேளை படுக்கை அமர்வில் இருந்தவண்ணம் கூறிய உறுதி மிக்க தெளிவான வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ரீங்காரமிடுகின்றது. எனக்குப் பிரச்சனை ஒன்றுமில்லை, நீங்கள் யோசிக்காமல் அடுத்த தாக்குதலைப் பாருங்கோ. கெதியில் வருவன் ஓ... இளம் வீரனே எனக்குத் தெரியும் நீ நிச்சயமாக எம்வீரர் மனத்தேறி மீண்டும் மீண்டும் பகை மாய்க்க வருவாய். உன் நினைவுச் சுமையோடு ஆயிரம் ஆயிரம் இளம் வீரர்கள் அணிவகுத்து களமாடச் செல்வர். ■

தமிழ்ச்செல்வன்.

## நிகழ்வும்...

கட்ட ஈழப் போரில் எதிரியின் ஒடுக்குமுறை முயற்சிகளைத் தொடர்ச்சியாக முறியடித்து வருகின்றமை இவ்வாறு தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளினால் எதிரி ஒடுக்க முடியாத அளவுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன்று, தமிழீழ மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை பற்றி வாய் கிழியப் பேசும் சிலர், அவ்விடுதலையினை அடைந்து கொள்வதற்கு இராணுவ ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படக்கூடாது என்பதனை புரிந்து கொள்ளாதவர்களாகவோ அல்லது புரிந்து கொள்ள விரும்பாதவர்களாகவோ இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இராணுவ பலம் குறித்த சிந்தனையினை இவர்கள் இராணுவ வாதமாகப் பார்ப்பதனையும் உணர முடிகின்றது.

இன்று தமிழீழ மக்களின் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமாயின், தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படக்கூடாது என்பதும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படக்கூடாது என்றால் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழீழ மக்களும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதும் தமிழீழ மக்களின் நலனின் அடிப்படையில் சிந்திக்கும் எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிரி முறியடிக்காது இருக்கும் வரை எமது உரிமைகளை எதிரி வழங்காது விடக்கூடிய நிலைமையினை உருவாக்காது தடுக்க முடியும். ஆனால் எதிரியினை நாம் முறியடித்தால் தான் எமது உரிமைகளை நாம் வென்றடைய முடியும்.

இவ் அடிப்படையில் எதிரியினைத் தோற்கடிக்கவும் எமது உரிமைகளை வென்றெடுக்கவும் உழைக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம் முன்னே உள்ளது. எமது கடமையினை நாம் மறக்கலாகுமா? ■

# மன்னாரில் கடும் வரட்சி குடிநீரின்றி மக்கள் அவதி

மடுத் திருப்பதியையும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் நிலவும் கடும் வரட்சி காரணமாக இராணுவ அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு அங்கு தஞ்சம் அடைந்துள்ள சுமார் இரண்டாயிரத்து எண்ணூற்றி முப்பத்தொரு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் முப்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்றி முப்பத்தி எட்டு பேர் நீரின்றி அவதிப்படுகின்றனர்.

அங்கு குழாய்க் கிணறுகளை அமைக்க உகந்த மண் படை காணப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதே வேளை அங்குள்ள கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுவதினால் மக்கள் பல மைல் தொலைவில் சென்று நீர் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு செயற்படும் பொதுநல நிறுவனங்களின் மூலம் ஒரு நாளைக்கு ஒரு பவுசர் நீர் மட்டுமே வழங்கப் படக்கூடியதாக உள்ளது. மேலதிக நீரைப் பெற்று பவுசர்களில் வழங்க முடியாமைக்கு காரணம் அச் சுற்றாடலில் பவுசருக்கு தேவையான நீரைப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லை எனவும் தெரிய வருகின்றது.

இதே வேளை பாலம்பிட்டி, தச்சனா மடு பகுதியில் 50 ஏக்கர் நிலப்பகுதியில் அகதிகளை மீளக் குடியேற்றுதல் நடைபெறும் இடத்தில் 8 திறந்த கிணறுகளும், 8 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சுமார் 558 குடும்பங்கள் உள்ளன.

குடிப்பதை தவிர்த்து ஏனைய தேவைகளுக்கான நீரை பண்டிவிரிச்சான், தச்சனா மடு ஆகிய பகுதிகளில் இருந்து பெற்றுக் கொள்ளுகின்றனர். ■

# யாழ். அகதி முகாம்களில் மூளைக் காய்ச்சல் அபாயம்

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் மூளைக் காய்ச்சல் வெகுவாகப் பரவும் அபாயம் தோன்றியுள்ளது எனத் தெரிய வருகின்றது.

யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் அகதி முகாம்களில் இருந்து இரண்டு பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர், எனத் தெரிய வருகின்து. இதனைத் தொடர்ந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சியினால் இந் நோயாளிகளின் குருதி பரிசோதிக்கப்பட்டு இதில் மேற்படி நோயிற்கான காரணி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் இந்நோய்க் காரணியைப் பரப்பும் நுளம்பு இனமும் வெகுவாகப் பரவலடைந்துள்ளதால், இது தொடர்பாக முகாம்களில் வசிக்கும் மக்களை முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந் நோய்க் காரணிகளைப் பெருக்கும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

# அம்பாறை பாடசாலைகளில் சிங்களம் கட்டாய பாடம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் கட்டாய பாடமாக சிங்களம் கற்பிக்கப்படுகின்றது. இம்மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய பிரதேசத்தில் உள்ள சுமார் 180 பாடசாலைகளில் 110 பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படுகின்றது.

ஏனைய பாடசாலைகளில் அடுத்த தவணையில் இருந்து சிங்களம் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்டத்தின் உயர் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பகுதி பிள்ளைகளுக்கு தமிழ் மொழிக் கல்வி கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லை. ஆனால் சிங்கள மொழியை கற்பிக்க புதிய ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■



# உன்னி உன்னி.....

[illegible]

■ சோ. பத்மநாதன்

# குப்பிவிளக் கொளியில்...

[illegible]

■ [illegible]


T.C.C
P.O.Box 604, Mulgrave North
Victoria 3170, Australia

L.T.T.E
Denmark

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France

T.C.C
Via Marliano Stabile 34
90139 Palermo, Italy

T.C.C
P.O.Box 899 Vika
Oslo 1, Norway

U.T.D
54 Tavistock Place
London WC1H 9RG, UK